Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 02 திங்கட்கிழமை (17.12.2012) பக்கங்கள் 20 ஓசை – 078






















# வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவு உரிய வகையில் மீளாய்வு அவசியம்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து





(யாழ்ப்பாணம்)

இந்திய வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவு குறித்து உரியமுறையில் மீளாய்வு செய்யப்படுவதுடன், இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் புதிதாக உள்வாங்கப்பட்டபட்டதாரிப் பயிலுனர்களை இணைத்துக் கொள்வதனூடாக தகவல்களைச் சரியாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்ள முடியுமென அமைச்சர் டக்ளஸ தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்திய வீடமைப்புத்திட்டம் தொடர்பான மீளாய்வுக் கலந்துரையாடல் நேற்றையதினம் அமைச்சர் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வீட்டுத்திட்டத் தெரிவின்போது பயனாளிகள் தெரிவில் பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## வங்கிப் பணியாளரை இழுத்துச் சென்றது அலை

(காரைநகர்)

சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளைப் பணியாளர் ஒருவர் காரைநகர் கடலில் நீராடிய வேளையில் அலையில் சிக்குண்டு காணாமற் போயுள்ளார். சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

தெல்லிப்பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்லாகம் பகுதியைச் சேர்ந்த உதய குமார் நிதர்ஷன் (வயது-21) என்பவரே இவ்வாறு நண்பர்களுடன் கசூரினா கடலில் குளித்த வேளையில் நேற்று நண்பகல் 2.00 மணியளவில் அலையில் அள்ளுண்டு காணாமல் போயுள்ளதாகவும காணாமல் போனவர் உருமபிராய் இலங்கை வங்கிக் கிளை பணியாளர் ஒருவரின் மகன் என்றும் விசாரணையின்போது தெரியவருவதாக கசூரினா கடற்கரைப் பாதுகாப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (50)

# சுயாதீனகுழு அமைக்கும் தீர்மானம் நாடாளுமன்றுக்கு அறிவிக்க வேண்டும்

## கோருகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தீர்மானத்தை பரிசீலனை செய்வதற்கு சுயாதீன குழுவொன்றை நியமிப்பதற்கு தான் தீர்மானித்திருப்பதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. இது தொடர்பில் அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் நிறைவடைந்ததன் பின்னர் ஒரு சுயாதீன குழுவை நியமிக்கப் போவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## வெற்றுக் கண்களால் சூரியனைப் பார்க்காதீர்கள்

வெற்றுக் கண்களால் சூரியனை பார்க்கவேண்டாம் என ஆதர் சீ கிளாக் மத்திய நிலையம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது. இந்நாட்களில் வானில் ஏற்படும் மாற்றத்தினை பொதுமக்கள் ஆர்வத்துடன் வெற்றுக்கண்களால் பார்த்து வருவதாகவும் இதன் காரணமாக

19 ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாத பிரிவினரால் அல்வாயில் இருவர் கைது

(வடமராட்சி)

அல்வாய் வடக்கைச் சேர்ந்த இருவர் கடந்த வெள்ளிக்கிழமை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கந்தசாமி கிரிதரன் (வயது-23), ஸ்ரீரங்கநாதன் கஜேந்திரன் (வயது-25) ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டதாகப் பருத்தித்துறை பொலிஸில் உறவினர்களால் முறையிடப்பட்டுள்ளது.

கிரிதரன் கடந்த வெள்ளிக் கிழமை மாலை இந்தியாவிலிருந்து வந்தவேளை விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும் கஜேந்திரன்

19 ஆம் பக்கம் பார்க்க

## சமஷ்டி ஆட்சி முறையே இலங்கைக்கு தேவை


### என்கிறார் மங்கள எம்.பி.

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நீக்குவதற்கு பதிலாக கூடுதல் அதிகாரங்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பகிரும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். வாராந்த செய்தி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு போதுமானதல்ல. தேவையானால், தெற்கில் மாகாண சபை முறைமையை இரத்துச் செய்ய ஐக்கிய தேசியக்கட்சி இணங்கும் எனவும் மங்கள கூறியுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## திருத்தங்களுடன் 'திவிநெகும' நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு



(கொழும்பு)

உயர்நீதிமன்றம் தெரிவித்த பரிந்துரைகளின் அடிப்படையில் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் திவிநெகும சட்டமூலம் எதிர்வரும் ஜனவரி மாதம் நான்காம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் படவுள்ளதாகப் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். திவிநெகும சட்டமூலத்தை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமெனில் குறித்த

19 ஆம் பக்கம் பார்க்க



# கரைத்துறைப்பற்றில் மீள்குடியேற்ற கொடுப்பனவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் இம்மக்களுக்கு யு.என்.ஏச்.சி.ஆர் நிறுவனத்தால் வழங்கப்படும் மீள்குடியேற்றப்பணமான 20 ஆயிரம் ரூபா பணத்தை பெறாத மக்களுக்கு இன்று இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இப்பிரதேச செயலர் பரிவிலுள்ள வற்றாப்பளை முள்ளியவளை வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மத்தி, தண்ணீருற்று மேற்கு, நீராவிப்பிட்டி கிழக்கு, கணுக்கேணி மேற்கு, கிழக்கு ஹிஜ்னாபுரம் ஆகிய 11 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்களில் இக்கொடுப்பனவைப்பெறாதவர்கள் இன்று திங்கட்கிழமை கரைத்துரைப்பற்றுப் பிரதேச செயலகத்திற்கு சென்று காலை 9.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை பெற்றுக் கொள்ளமுடியும். வருகை தரும் போது குடும்ப அட்டை தேசிய அடையாள அட்டை, வன்னிப் பதிவை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

# ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வு

(வவுனியா)

வவுனியா மற்றும் மன்னார் ஊடகவியலாளர்களுக்கு கன்டிக்கப் இன்டர்நஷனல் நிறுவனத்தின் ஊடாக மாற்றுத்திறனாளிகள் தொடர்பான செயலமர்வு வவுனியா புலேஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஊடகங்கள் வாயிலாக மாற்றுத்திறனாளிகளின் செய்திகளை வெளிப்படுத்தல் தொடர்பில் இங்கு விளக்கமளிக்கப்பட்டது. அத்துடன் மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் உள்ளீர்க்கப்பட வேண்டும், அபிவிருத்தியில் மாற்றுத்திறனாளிகள் பங்காளிகளாக உருவாக்கப்பட வேண்டும், மாற்றுத்திறனாளிகளுக்கான சட்டங்கள் மற்றும் கட்டடங்களை எதிர்காலத்தில் அமைக்கும் முறைகள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டன.

கன்டிக்கப் இன்டநஷனல் நிறுவனத்தின் வடபிராந்திய திட்ட முகாமையாளர் பிறேம் வளவாளராக கலந்துகொண்டு செயலமர்வை நடத்தினார்.

# விவசாய போதனாசிரியர் உப அலுவலகம் முரசுமோட்டையில் இயங்க வேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முரசுமோட்டை விவசாய போதனாசிரியர் உப அலுவலகத்தை மீள இயங்க வைக்குமாறு இக்கிராம விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இம்மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் கீழ் உள்ள முரசுமோட்டை உப அலுவலகம் புனரமைக்கப்பட்டபோதிலும் அதனுடைய செயற்பாடுகள் இன்றி காணப்படுகிறது.

இதனால் விவசாயிகள் தமது தேவைகளை பெறுவதற்கு திணைக்களத்திற்கு செல்ல வேண்டியுள்ளதாகவும் இவ் அலுவலகம் திறக்கப்பட்டால் தாம் இலகுவாக தேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் என விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஆர்.செல்வராசாவிடம் இது தொடர்பாக கேட்டபோது இவ் அலுவலகம் ஜனவரி மாதம் திறக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (கே)

# தேசிய சுகாதார வார நிகழ்வு



தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினூடாக ஏற்பாடு செய்யப்பட்ட பல நிகழ்வுகள் மன்னார் முருங்கன் வைத்தியசாலை மற்றும் அப்பிரதேசத்திலும் மேற்கொள்ளப்பட்டுவருவதாக முருங்கன் மாவட்ட வைத்திய அதிகாரி எம்.ஒஸ்மன் சாள்ஸ் தெரிவித்தார்.

இந்நிலையில் முருங்கன் வைத்தியசாலையில் சிரமதானம், வீட்டுத்தோட்டம், சுகாதார விழிர்ப்புணர்வுகள், தொற்றா நோய்களை பரிசோதித்தல் போன்ற பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

தெடர்ந்தும் அப்பகுதி மக்கள் இதற்கான ஒத்துழைப்புக்களை எமக்கு வழங்க வேண்டுமென முருங்கன் மாவட்ட வைத்திய அதிகாரி எம்.ஒஸ்மன் சாள்ஸ் மேலும் தெரிவித்தார்.

# பயிற்சிப்பட்டறை


உலக வங்கியின் நிதியுதவியுடன் புறநெகும "நெல்சிப்திட்ட" ஒப்பந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான விளக்க பயிற்சிப்பட்டறை யாழ். உள்ளூராட்சி திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

உதவி உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற ஒவ்வொரு பிரதேசசபை சார்ந்த உதவித்திட்ட முகாமையாளர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்கும் பொறியியலாளர்களுக்கும் "ஒப்பந்த முகாமைத்துவம்" என்னும் தொனிப்பொருளில் இப்பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து 50இற்கும் மேற்பட்டவர்கள் இப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டனர்.

# பாடசாலைகளின் பௌதீக அபிவிருத்தி மூலம் மாணவர்களின் கற்றலை முன்னேற்ற முடியும்

## நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்



2012 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் இப்பாடசாலை மாணவர்கள் பலர் சித்திமட்டத்தை அடைந்துள்ளமை மகிழ்ச்சிதரும் ஒரு விடயமாகும். இவ்வாறாக கிராமப் புறப்பாடசாலைகளை பௌதீக ரீதியாக அபிவிருத்தி செய்வதன் மூலம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மென்மேலும் முன்னேற்ற முடியும் என்றும். பாடசாலைக்கான கற்பித்தல் உபகரணங்கள் விரைவில் பெற்றுத் தரப்படுமென்றும் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், கரவெட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் கட்டைவேலி மெதடிஸ்த மிசன் பாடசாலையின் பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் புஸ்பகரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்தகால யுத்தத்தினால் கல்வியை மேம்படுத்த முடியாதவொரு நிலை எமக்கிருந்தது. ஆனால் யுத்தம் ஓய்ந்த அமைதிச்சூழலில் கல்வியை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். அதனடிப்படையில் 5000 ஆரம்பப்பாடசாலைகளையும், ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளையும், அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை அரசு நடைமுறைப் படுத்தி வருகின்றது. நாம் அரசுடன் இணைந்து செயலாற்றுவதன் மூலம் வடக்கிலும் இத்திட்டத்தை துரிதமாக முன்னெடுத்து வருகின்றோம்.

இப்பாடசாலைச் சமூகம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இன்னிய வாத்தியக்கருவியை இவ்வாண்டுக்கான எனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து வழங்கியிருந்தேன். அவ்வாறே கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் பல்லூடகத் தெறிகருவியினையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாண்டுக்கான [illegible]மைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள், பல்வேறு போட்டி நிகழ்வுகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் உள்ளிட்ட அதிதிகள் வழங்கி வைத்தனர்.

தொடர்ந்து மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்வுகள் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் கரவெட்டிப் பிரதேச இணைப்பாளர் இ.செந்தில்நாதன், வடமராட்சிக் கல்வி வலய முகாமைத்துவ பிரதிக்கல்விப்பணிப்பாளர் சிறிகரன், உட்பட பாடசாலை சமூகத்தினர், மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்

## பொதுச்சபைக் கூட்டம்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் கோவில் பற்று பலநோ.கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்சங்கத்தின் கிளைகளில் பிரேரணைகள் ஏதேனும் இருப்பின் கிளைக்குழுக் கூட்டத்தை நடத்தி பிரேரணைகளை முன்மொழிந்து வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (104)

# முந்திரிகை செய்கைக்கு பயனாளிகள் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் முந்திரிகை பழமரச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அதற்கான முதற்கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள இத்திட்டம் கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தினூடாக செயற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி இம்மாவட்டத்தில் பிரமந்தனாறு , புதுமுறிப்பு, ஆகிய பிரதேசங்களில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு திணைக்களத்தினால் முந்திரிகை செய்கையை மேற்கொள்ளும் வகையில் உபகரணங்களான தூண், நெற் போன்றன வழங்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் செய்கையை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே)



இலங்கை சமுர்த்தி அதிகாரசபையால் இவ்வாண்டுக்கான சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத்தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கொடிவார நிதி சேகரிப்பில் யாழ்மாவட்டம் முதலாம் இடத்தைப் பெற்றதுடன் தேசிய ரீதியில் நல்லூர் பிரதேச செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றது இது தொடர்பான பாராட்டு விழா அண்மையில் யக்கலையில் இடம்பெற்றபோது நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி யோ.ராகினி அதிகாரசபை பணிப்பாளர் ஒருவரிடமிருந்து விருது பெறுவதைக் காணலாம். (26)

# 2013 இன் ஆசிரிய இடமாற்றம்

# கூட்டத்தின் பின்னரே தீர்மானம்

### - இலங்கை ஆசிரிய சங்க பொதுச் செயலாளர்

(நெல்லியடி)

2013 ஆம் ஆண்டிற்கான வடமாகாண ஆசிரியர்களில் இடமாற்றம் தொடர்பான தீர்மானங்கள் குறித்து எதிர்வரும் 22 ஆம் திகதி இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட ஏனைய தொழிற் சங்கங்களுடனான சந்திப்பொன்றை ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளார்.

இதன்போது யாழ். மாவட்டத்திலிருந்து வன்னிப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்கள் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

தற்போது யாழ். வலயம், வடமராட்சி வலயம், வலிகாமம் வலயம், தென்மராட்சி வலயம் போன்ற வலயங்களில் இருந்து வன்னிப்பகுதிக்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் விபரம் வடமாகாண அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இது முறையான இடமாற்ற சபைகள் ஒன்று கூடி எடுக்கப்பட்ட விபரங்கள் அல்ல. கஷ்டப்பிரதேசங்களில் கடமை புரியும் ஆசிரியர்களின் விபரங்களும் கடல்கடந்து வேலை செய்யும் ஆசிரியர்களின் விபரங்களும் சுகயீனமுற்றிருக்கும் ஆசிரியர்களின் விபரங்களும் இதில் அடங்குகின்றன. எனவே இந்த இடமாற்ற பெயர்பட்டியல் முறையற்றதாகும். ஆகவே இது தொடர்பான தகவல்களை எதிர்வரும் 22 ஆம்திகதி ஆளுநருடனான சந்திப்பின்போது கலந்துரையாடவுள்ளோம். அதுமட்டுமன்றி வன்னிப் பகுதியில் கலவி கற்கும் மாணவர்களின் கல்வி முக்கியம்.

அதே போல்வன்னியில் இது வரைகாலமும் கடமை புரியும் ஆசிரியர்களின் சேவையும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். மாணவர்களின் கல்விக்கு தடங்கல் ஏற்படாதவாறு ஆசிரியர் இடமாற்றங்கள் நடைபெறவேண்டும். யாழ். மாவட்டங்களில் கஷ்டப் பிரதேசங்களில் கடமைபுரியாத ஆசிரியர்களும் வன்னிப் பகுதிக்கு கடமைக்கு செல்வதில் பாதிப்பு ஏற்படாதவர்களும் கட்டாயமாக அங்கு சென்று கடமையை பொறுப்பேற்க வேண்டும்.

உண்மைக்கு புறப்பான காரணங்களைக் காட்டுபவர்களுக்கு எமது சங்கம் ஒரு போதும் துணை போகாது. வலயங்களினால் அனுப்பப்பட்ட பெயர் விபரங்களும் மேன்முறையீடு செய்யப்பட்டவர்களின் விபரங்களும் சேகரிக்கப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

மேன்முறையீடு செய்பவர்கள் வன்னிப்பகுதி மாணவர்களின் கல்வியையும் அவர்களின் நிலையையும் உணர்ந்து சேவைமனப்பாங்குடன் சேவையாற்ற வேண்டும். எனவே பொய்யான காரணங்களை குறிப்பிட்டு தப்பித்துக் கொள்வதையும் தவிர்க்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (12)

## கஜமுக சூரன்போர்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை கரைப் பிள்ளையார் ஆதி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரத இறுதி நாளான இன்று திங்கட்கிழமை கஜமுக அசுரசங்காரம் பிற்பகல் 3 மணி முதல் இடம்பெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி முதல் மகா கணபதி கோமம் தொடர்பான கிரிகைகள் நடைபெறும். (104)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2012

உறுப்புரை - 15

1. ஒரு தேசிய இனத்தவராகவிருக்கும் உரிமை ஒவ்வொருவருக்குமுண்டு.

2. எவரதும் தேசிய இனத்துவம் மனப்போக்கான வகையில் பறிக்கப்படுதலோ தேசிய இனத்துவத்தை மாற்றுவதற்கான உரிமை மறுக்கப்படுதலோ ஆகாது.

# வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் சுவர்க்க வாசல் ஏகாதசி உற்சவம்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் - வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள தேவஸ்தான சுவர்க்கவாசல் ஏகாதசி உற்சவம் எதிர்வரும் 24ஆம்திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அதிகாலை 3.30 மணிக்கு சுப்ரபாதத்துடன் ஆரம்பமாகும் இவ்விழா காலை 6 மணிக்கு நடைபெறும் சுவர்க்கவாயில் தரிசனத்தை தொடர்ந்து சுவாமி வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளுவார்.

காலை 8.30 மணிக்கு மூலவர் அபிசேகமும் காலை 10.15 மணிக்கு காலை சந்திப்பூசையும் இடம்பெறும். பின்னர் 10.45 மணிக்கு ஆதி வெங்கடேசர் உள்வீதியுலாவும் இடம்பெறும். மாலை 4.15 மணிக்கு சாயரட்சை பூசையுடன் ஆரம்பமாகி 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி திரு வீதியுலா நடைபெறும்.

காலை 6.00 மணிக்கு சுவர்க்க வாசல் தரிசனத்தைத் தொடர்ந்து அன்று பகல் முழுவதும் அடியார்கள் அர்ச்சனை வழிபாடுகள் செய்யலாம். (137)

# எழுவைதீவு நூலகம் நடத்திய வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் கீழ் உள்ள எழுவைதீவு பொது நூலகத்தால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களுக்கிடையே நடத்திய போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

எழுவைதீவு பொது நூலகம்

கதை சொல்லல்

கெ.ஜெனுஜா, (எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்), அ.கமிலஸ்,(எழுவைதீவு றோ.க.த.க பாடசாலை), வ.சார்மிகா (எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்)

பேச்சு

கி.ஜெசில்டா, (எழுவைதீவு றோ.க.த.க பாடசாலை), வி.மேரிடிஷாளினி, (எழுவைதீவு றோ.க.த.க பாடசாலை), வி.மேரிசகுந்தலா (எழுவைதீவு றோ.க.த.க பாடசாலை),

சித்திரம்

ம.கஜீபன், (எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்) ய.தனுசன், (எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்) ச.செளமியா (எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்)

கட்டுரை கீழ்ப்பிரிவு

ம.கொண்சலா,(எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்) ய.யனுசன்,(எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்) அ.அன்ரனி அரியதாஸ் (எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்)

பொதுஅறிவுப்போட்டி

அ.மேரிஅஜந்தா, (4 ஆம் வட்டாரம் (எழுவைதீவு) கி.கிளின்ரன்பெனான்டோ,(4 ஆம் வட்டாரம் எழுவைதீவு) ம.ஸ்ரெலா (4 ஆம் வட்டாரம் எழுவைதீவு)

# விசர்நாய்க் கடியிலிருந்து பாதுகாக்க கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்

(யாழ்ப்பாணம்)

விசர்நாய்க் கடியிலிருந்து பொது மக்கள் தம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து சுகாதார திணைக்களத்தினர் வெளியிட்டுள்ளனர்.

அதன் விபரம் வருமாறு,


அண்மையில் விசர்நாய் கடித்ததால் ஏற்பட்ட நோயினால் பாதிக்கப்பட்ட மூன்று வயதுச் சிறுவன் ஒரு வன் உயிரிழந்துள்ளான். இவ் விசர்நாய் கடியினால் ஏற்படும மரணங்கள் தவிர்க் கப்படக் கூடியது. நிச்சயமான மரணத்தை ஏற்படுத்தக்கூடிய இந்நோயிலிருந்து நாம் அனைவரும் பாதுகாப்பாக இருக்க இது குறித்து முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நாய், பூனை போன்ற விலங்குகளால் கடியுண்டவர்கள், நகக்கீறல்களுக்கு உள்ளானவர்கள் அனைவரும் வைத்தியசாலைக்குச் சென்று முழுமையான சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். எனவே மேற்படி பாதிப்புகளுக்குள்ளானவர்கள் காலம் தாழ்த்தாது உடன் வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

வளர்ப்பு நாய்களை வீதிக்கு செல்லாதவாறு கட்டிவளர்க்க வேண்டும்.

வளர்ப்பு நாய்களுக்கு குறித்த காலத்தில் தவறாது A.R.V உள்ளிட்ட தடுப்பு மருந்துகளை ஏற்றிக் கொள்ளவேண்டும்.

விசர்நோய் ஏற்பட்ட நாய்கள் கோபமடைந்து காணப்படும். அதிகளவு உமிழ்நீர் வெளியேறும். வால் தொங்கியபடி இருக்கும் இதுபோன்ற குணங்களுடன் அசாதாரண நிலையில் காணப்படும் நாய்கள் தொடர்பாக விழிப்பாக இருக்கவேண்டும். இவ்வாறு இனங்காணப்பட்ட நாய்கள் தொடர்பில் உடனடியாக உள்ளூராட்சி சபையினருக்கோ அல்லது சுகாதாரப் பகுதியினருக்கோ தகவல் வழங்க வேண்டும். மேற்படி வழிமுறைகளை கையாள்வதன்மூலம் பொதுமக்கள் விசர் நாய்கடியினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (54)

**திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியும், சிறுவர் காப்பகமும் இணைந்து நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் அண்மையில் நடத்திய சிறுவர் கலை விருது நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சொற்பொழிவாளர் காரை. எம்.பி.அருளானந்தனின் பாரியார் திருமதி அனுசூயா அருளானந்தன் மங்கள விளக்கேற்றுவதையும்; காப்பக பணிப்பாளர் தனபாலன் விருந்தினர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பத்னையும் காணலாம். (60)**

# பால்நிலை சமத்துவம் விளக்க கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வுமன் இன் நீட் (பெண்களின் தேவைகள்) என்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் பால்நிலை சமத்துவம் தொடர்பான விளக்க கருத்தரங்கும், ஊடகவியலாளர் சந்திப்பும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியவில் யாழ்.ரில்கோ ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இந்நிறுவனம் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் ஏற்படும் வன்முறைக்கு எதிராக தமது செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தில் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுத்தி வருகின்றது. இந்நோக்கத்தை அடையும் முகமாக உளவளத்துணை இலவச சட்ட உதவி விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், சுயதொழிலுக்கான உதவி, தற்காலிக புகலிடவசதி போன்ற பணிகளை இம்மக்கள் மத்தியில் முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் இக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# வயல் வெளிகளில் கட்டாக்காலிகள்; கட்டுப்படுத்த துரித நடவடிக்கை

(வேலணை)

மண்டைதீவு கிராமத்தில் வயல்வெளிகளிலுள்ள நெற்பயிர்களை கட்டாக்காலிகளாகத் திரிந்து வருகின்ற மாடுகள் வயலுக்குள் புகுந்து பயிர்வகைகளைத் தின்று அழித்து வருகின்றதாகவும், இவற்றினைப் பிடித்து உதவுமாறு மண்டைதீவுப் பயிர்ச்செய்கைக் குழுவினது செயலாளர் மாணிக்கவாசகர் வேலணைப் பிரதேச சபையின் தலைவரை கேட்டிருந்தார்.

வேலணைப் பிரதேச சபையினது தலைவர் சி.சிவராசா அங்கு வந்து நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் கட்டாக்காலியாகத் திரிகின்ற மாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக பயிர்ச்செய்கை குழுவினது செயலாளருக்கு தெரிவித்துள்ளார். (05)

நான் என்ற அகந்தையைப் போக்கி விடுவதுதான் அடக்கம் என்பதற்கு உண்மையான பொருள் - மகாத்மா காந்தி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## சவடால்கள் சாதித்தது என்ன?

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இம்மாதம் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைக்காக, தீவிரத் தேசியவாதிகளின் பாரம்பரிய சிறப்புப் பட்டமாகிய 'துரோகி' என்பதால் கௌரவிக்கப்பட்டு இணையத்தளமெங்கும் வசைபாடப்பட்டு வருகிறார்.

எல்.ரீ.ரீ.ஈ சிங்களப் பொதுமக்களை, தமிழ் பொதுமக்களை, முஸ்லிம் பொதுமக்களை தாக்கியபோது, சமூகத் தலைவர்களை தாக்க ஆரம்பித்தபோது அது ஒரு பயங்கரவாத அமைப்பு என்று அழைக்கப்பட நேர்ந்தது என்றும், முழு நாட்டிலும் உள்ளதுபோல ஆயுதப் படையினர் வடக்கு மற்றும் கிழக்கிலும் பிரசன்னமாகி இருக்கவேண்டும் என்பதை உணர்ந்து அதை ஏற்றுக் கொண்டுள்ளோம். நாங்கள் கேட்பதெல்லாம் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள ஆயுதப் படையினரின் பிரசன்னம், தமிழ் மக்களை அடக்குமுறைக்கு உள்ளாக்குவதைப் போன்ற ஒரு வடிவத்தில் இருக்கக்கூடாது என்றும் பேசியதற்காக ஒருவர் துரோகி ஆகிவிடுவதெல்லாம் நம் தமிழ் சமூகத்திலேயே நடக்கக்கூடிய கேலிக்கூத்து.

அதை சிரித்து ஒதுக்கி விடலாம். ஆனால் சம்பந்தன் அவர்கள் பேச்சில், தனதும் தங்கள் அமைப்பினதும் பாரதூரமான குற்றங்களை ஒன்றுமில்லையென மறைத்துவிடலாம் என்று முயன்றிருப்பதைச் சுட்டிக்காட்டியாக வேண்டும். "ஏன் நீங்கள் எங்களை எல்.ரீ.ரீ.ஈ யின் பிரதிநிதிகள் என்று அழைக்கிறீர்கள்? எல்.ரீ.ரீ.ஈயால் நாங்கள் கொல்லப்பட இருந்ததால்தான் நீங்கள் எங்களை அவர்களின் பிரதிநிதிகள் என்று அழைக்கிறீர்களா? எல்.ரீ.ரீ.ஈ யின் தாக்குதல் பட்டியலில் நாங்கள் இடம்பெற்றிருந்தபடியால்தான் நீங்கள் எங்களை அவர்களின் பிரதிநிதிகள் என்று அழைக்கிறீர்களா?" என்றெல்லாம் அப்பாவித்தனம் போல கேள்விகளை எடுத்துவிட்டிருக்கிறார்.

எல்.ரீ.ரீ.ஈயால் கொல்லப்பட இருந்தவர்கள் எல்.ரீ.ரீ.ஈ யின் பிரதிநிதிகளானதும், எல்.ரீ.ரீ.ஈயாகவே இருந்தவர்கள் எல்.ரீ.ரீ.ஈயால் கொல்லப்பட வேண்டியவர்கள் என மாறியதும் தானே இங்கு நடந்த வரலாற்றுக் காட்சிகள்? தீர்வை வைக்காவிட்டால் போர் வெடிக்கும் என்றும், படையினர் எமது நிலத்திலிருந்து வெளியேறா விட்டால் எமது மக்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்றும் 13வது திருத்தத்தை எடுத்தால் நாடு அழிவதைத் தடுக்க முடியாது என்றும் தானே உங்கள் கட்சிக்காரர்கள் இன்னமும் வீரஉரைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்?

யதார்த்தத்தைப் பேசி நடக்க வேண்டியதை நடத்தும் விதமாக என்ன முயற்சிகளைச் செய்திருக்கிறீர்கள்? ஆயுதங்களைக் கையில் வைத்திருக்கவில்லையே தவிர, எல்.ரீ.ரீ.ஈ யின் அதேவகையான சவால் அரசியலைத் தானே ஒரு மாற்றமுமின்றித் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறீர்கள்? உங்களது அரசியல் போக்கில் மாறுதலைக் காண்பிக்காமல், உங்களிடமிருக்கும் புலியிசத்தை விட்டுவிடாமல் சிங்கள மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியாது என்பதும், தீர்வுக்கான சூழலை இங்கு உருவாக்க முடியாது என்பதும்தானே யதார்த்தம்?

இதைப் புரியாதது போலவே எவ்வளவு காலத்துக்குத் தான் நடிப்பீர்கள்? நீங்கள் கேட்பது எத்தகைய ஒரு தீர்வை என்று இன்னமும் சொல்ல முடியாமல் தானே இருக்கிறீர்கள்? அதைச் சொன்னால் உங்கள் வாக்கு வங்கி சிதைந்துவிடும் என்பது தானே உங்கள் பயம்?

சிங்கள அரசுக்குச் சவால் விடுகிறோம் என்று காட்டி தமிழ் மக்களுக்கு உசுப்பேத்திக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, தீர்வுக்கு ஆகவேண்டியதுகள் பற்றி நீங்கள் பேசவேண்டும். அந்த முயற்சிகளில் இறங்க வேண்டும். அதைவிடுத்து, எமது மக்களிடம், இன்னமும் புலிகள் காலத்து வீரத்தைத் தொடர்கிறோம் என்று நீங்கள் காட்டிக்கொள்ள முற்படுவதுதான் இங்கு பிரச்சினை தீராமலிருக்கப் பிரதான காரணம்! - ஆசிரியர்

# பிராந்திய சமாதானத்தைப் பாதுகாக்க மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வு

## இப்படிக் கூறுகிறார் அரவிந் குப்தா

மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை வழங்குவதும், தமிழ் மக்களுக்கான உரிய அரசியல் தீர்வினை வழங்குவதுமே, பிராந்திய ரீதியான நிலையான சமாதானத்தை தக்க வைத்துக்கொள்ள சிறந்த வழி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் உள்ள பாதுகாப்பு கற்கை மற்றும் கண்காணிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் அரவிந் குப்தா இதனைத் தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பிலான இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பில் அவரிடம் கேட்கப்பட்ட போது இதனை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தமிழர்களுக்கான தீர்வுத் திட்டம் தொடர்பிலான எத்தனிப்புகளின் போது, இந்தியாவில் உள்ள தமிழர்களை மறந்து செயற்பட முடியாது.

சமூகத்தின் அடிப்படைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வெளிநாட்டு கொள்கைகளை வரையறை செய்யும் போது, அந்த நாட்டின் மக்கள் மற்றும் ஊடகங்களை புறக்கணித்து செயற்பட முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அரசியல்வாதிகளுக்கு வரி செலுத்துகிறது அரசு

(கொழும்பு)

அமைச்சர்களின் சார்பில் அரசாங்கத்தினால் வரி செலுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோப் அறிக்கையின் பரிந்துரைகள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாக அரச வியாபாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்டோருக்கான வரிகள் அரச நிறுவனங்களினால் செலுத்தப்படுகின்றது. இவர்களின் சார்பில் அரசாங்கம் நூறு கோடி ரூபாவிற்கு மேல் வரி செலுத்தி வருகின்றது.

அரசாங்க நிறுவனங்கள், திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களில் நிலவும் இவ்வாறான முறைகேடுகளினால் பாரியளவில் நட்டம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சுகாதார வார நிகழ்வு

(ஆனைக்கோட்டை)

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் வாரத்தின் ஆரம்பதினத்தன்று பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வைத்தியசாலை வளாகத்தில் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதுடன் தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. இதில் வைத்தியசாலை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.(104)

## உணவுக்கான வேலைத்திட்டம்; தீருவில்குளம் ஆழமாக்கப்பட்டுள்ளது

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை தீருவில் குளத்தை ஆழமாக்குதல் மற்றும் அகலமாக்கும் வேலைத்திட்டத்தில் பங்களித்த மக்களுக்கான நிவாரண உதவியை உலக உணவுத் திட்டத்திலிருந்து தீருவில் விளையாட்டுக் கழகம் வழங்கியுள்ளது.

இவ்வேலைத்திட்டத்துக்கான நிவாரணம் வழங்கும் நிகழ்வு வல்வெட்டித்துறை தீருவில் பகுதியில் உள்ள தனியார் வீட்டில் வைத்து தீருவில் விளையாட்டுக்கழக தலைவர் பொ.ஈஸ்வரலிங்கம் கழகச் செயலாளர் அ.வெற்றிவடிவேல் கழக உறுப்பினர் வி.பரமேஸ்வரன் மற்றும் வல்வெட்டித்துறை நகரசபை தலைவர் ந.அனந்தராஜ் ஆகியோர் அம்மக்களுக்கு வழங்கியிருந்ததாகவும் தெரியவருகின்றது.

வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட வல்வெட்டித்துறை தீருவில் பகுதியில் உள்ள வயலூர் முருகன் ஆலயத்துக்கு பின்புறத்தில் உள்ள குளத்தை உலக உணவுத் திட்டத்தின் கீழ் சுமார் 9 இலட்சம் ரூபா செலவிலும் வல்வெட்டித்துறை நகரசபையின் பங்களிப்பு நிதியிலும் குளத்தை ஆழமாக்கும் மற்றும் அகலமாக்கும் வேலைத்திட்டம் ஒன்றரை மாதகாலம் நடைபெற்றது.

இதற்கு குறித்த பகுதி மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கியதாக இத்திட்டத்திலிருந்து நாளொன்றுக்கு ஒருவருக்கு இரண்டரை கிலோ அரிசி, 400 கிறாம் கௌபி, மரக்கறி எண்ணெய் உள்ளிட்ட உலர் உணவுகளை 102 பேருக்கு வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குளத்தை ஆழமாக்கிய மற்றும் அகலமாக்கிய மண்ணைக் கொண்டு தீருவில் விளையாட்டு மைதானம் சற்று உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் உலக உணவுத் திட்ட வேலைத்திட்டத்தில் நிவாரணம் வழங்கும் நிகழ்வில் உலக உணவு நிறுவன அதிகாரிகள் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (116)

## நோயின்றி சுகமாக வாழ்வது எப்படி? வைத்திய கலாநிதி யோகேஸ்வரன் விளக்கம்

(திருநெல்வேலி)

மதுபாவனையைத் தவிர்த்தல், உடற்பயிற்சி செய்தல், சீனி, உப்பு போன்றவற்றை உணவில் சேர்க்காமல் இருத்தல், புகைத்தலை நிறுத்தல், தேவையானளவு பழங்களையும், மரக்கறி உணவுகளையும் கையாள்வதன் மூலம் தொற்றா நோய்களிலிருந்து எம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள முடியும் என தொற்றா நோய்களுக்கான பொறுப்பதிகாரி வைத்தியக் கலாநிதி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு நல்லூர் பொது வைத்திய சுகாதாரப் பணிமனையினால் நடத்தப்பட்ட சுகாதார விழிப்புணர்வுப் பேரணியுடன் கூடிய பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு நல்லூர் பொதுச் சுகாதார. வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி ரீ.திரிபுலன சுந்தரி தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய வைத்திய கலாநிதி எமது மக்கள அம்மியும், குளவியும், உரலும் உலக்கையும் மற்றும் ஆட்டுக்கல் போன்றவற்றைக் கைவிட்டுப் பல வருடங்கள் ஆகிவிட்டன. மாறிவரும் நவீன உலகுக்கேற்ப அவர்கள் இப் பொருட்களையெல்லாம் மறந்து விட்டார்கள். இவைகளை அவர்கள் முன்னர் பாவித்தமையினால் இயற்கையாகவே உடற்பயிற்சியை அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

வீட்டுவேலைகளைச் செய்வதன் மூலம் இயல்பாகவே அவர்களுக்கு உடற்பயிற்சி கிடைத்தது.

மாடிப்படிகளில் ஏறி இறங்குவது உடலுக்கு மிகவும் நல்லது. தற்போது 'லிப்ட்' டுக்கள் வந்துவிட்டதால் மாடிப்படி ஏற முடியாது முதலாம் மாடிக்குச் செல்கின்றோம். உப்பும் சீனியும் எமது உடலுக்குக்கேடு விளைவிக்கின்றது. முப்பத்தைந்து பேர்களுக்கு இரண்டு பேர் இருதய நோயாளிகளாக உள்ளார்கள். நாளுக்கு ஆகக் குறைந்தது 30 நிமிடமாவது உடற்பயிற்சி செய்தல் அவசியம்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் கடந்த செப்ரெம்பர் மாதம் மட்டும் 25 மில்லியன் ரூபாவுக்கு மதுபாவனையும் மற்றும் மது சம்பந்தப்பட்ட மென்பானங்களும் விற்பனையாகியுள்ளன. எமது மக்கள் எங்கே போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதை இது எடுத்துக்காட்டுவதாக உள்ளது எனத் தெரிவித்தார். (137)



# யாழ்ப்பாண கட்சிப் பத்திரிகையின்
# தொடரும் விசமத்தனங்கள்!

**புலிகள் பல தடவை அறிவுறுத்தியும் பொதுமக்கள் அதில் பயணம் செய்ததால், புலிகள் சுட்டு வீழ்த்தியது சரிதான் என்ற கருத்துப்பட அப்பத்திரிகை எழுதியுள்ளது! இது எவ்வளவு மோசமான, மானிட விரோதமான, அந்த விமானத்தில் பயணம் செய்து மரணித்தவர்களின் ஆத்மாக்களை அவதூறு செய்யும் கருத்து!**

**தியாகு**
**(வானவில் இதழ் 23இல்)**

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் கூட்டமைப்பு எம்.பி. ஒருவருக்குச் சொந்தமான நாளிதழ் தனது செய்திகளினூடாக செய்து வரும் விசமத்தனங்கள் கணக்கிலடங்காதவை. பலர் அந்தப் பத்திரிகையை வாசித்துவிட்டு சினம் கொள்வதும், அதில் கூறப்படும் செய்திகளுக்கு எதிர்மாறான முடிவுகளுக்கு வருவதும் தமிழ் மக்களின் பழக்கமாகிப் போய்விட்டது.

இன்னொரு பக்கத்தில் அந்தப் பத்திரிகையில் வெளியிடும் செய்திகள் குறித்து அவதூறு, செய்திகளைத் திரித்தல் போன்ற சட்டங்களின் கீழ் இலங்கை அரசாங்கம் ஏன் சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது எனக் கேள்வி எழுப்புவோரும் இருக்கின்றனர். அதேவேளை குறித்த பத்திரிகை இவ்வாறெல்லாம் பத்திரிகைச் சுதந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்தும், எவ்விதமான சட்ட நடவடிக்கைக்கும் உள்ளாகாமல் இருப்பதும், இலங்கையில் அதீதமான பத்திரிகைச் சுதந்திரம் இருப்பதன் அடையாளம் என வாதிடுபவர்களும் இருக்கிறார்கள்.

'சப்றா' நிதி மோசடி மூலம் யாழ். மக்களைக் கண்ணீரும் கம்மலும் ஆக்கிய முதலாளியின் அந்தப் பத்திரிகை, செய்திகளை எவ்வாறு திரிக்கிறது, அந்தரங்க நோக்கத்துடன் செய்திகளை எவ்வாறு வெளியிடுகின்றது, சமூகத்தில் மதிப்பு மிகுந்த, அதேவேளையில் தனக்குப் பிடிக்காதவர்களை எவ்வாறு அவதூறு செய்கிறது என்பதற்கு சில உதாரணங்களைக் கீழே தருகின்றேன்.

1. சமீபத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், சிரேஷ்ட அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் ஒருவர் சட்டத்தை மீறிச் செயல் பட்டதனால், அவரைக் கைது செய்து பிணையில் வெளிவர முடியாதவாறு காவலில் வைக்கும்படி அமைச்சரே பொலிஸாரிடம் கோரியதால், அவரது தம்பியாரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்த விடயத்தை - அதாவது அமைச்சரே தவறு செய்த தனது சகோதரரைக் கைது செய்யும்படி கோரிய முன்னுதாரணமான விடயத்தை - பெரும்பாலான ஊடகங்கள் மறைத்து, 'அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் பொலிஸாரால் கைது!' என, அமைச்சருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் செய்தி வெளியிட்டன.

இதை அவதானித்த அமைச்சர், தான்தான் தனது சகோதரரைக் கைது செய்யும்படி பொலிஸாரை வேண்டியதாக விளக்கம் அளித்து அறிக்கை விட வேண்டி ஏற்பட்டது.

அப்பொழுது அவர், 'தான் செய்த புண்ணியம் காரணமாக இரண்டு ஜனாதிபதிகளின் காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக பணியாற்றும் அதிர்ஷ்டம் கிடைத்தது. ஆனால் அதேநேரத்தில் தான் செய்த பாவத்தின் காரணமாக தனக்கு இப்படி ஒரு சகோதரர் வந்து வாய்த்தது' என மனம் வருந்திக் கூறியிருந்தார். சாதாரணமாக சமூகத்தில் பலர் இப்படி மனம் வருந்துவது வழமை. இதன் அர்த்தம் அதைக் கூறுபவர் ஏதோ பெரிய பாவம் செய்துவிட்டார் என்பதன் பொருள் அல்ல.

ஆனால் இந்தச் செய்தியை யாழ்ப்பாணப் பத்திரிகை எவ்வாறு தலைப்பிட்டு வெளியிட்டது தெரியுமா?

'அமைச்சர் மைத்திரிபால தான் செய்த பாவங்களை ஏற்றுக் கொண்டார்!'

மைத்திரிபால சொன்னது என்ன? பத்திரிகை சொல்வது என்ன?

வாழ்க! தமிழ்க் கட்சியின் பத்திரிகா தர்மம்!!

2. 1998 இல் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற 'லயன் எயர்' பயணிகள் விமானத்தை 48 பயணிகளுடனும், 6 விமானப் பணியாளர்களுடனும், 3 விமானிகளுடனும் சேர்த்து புலிகள் பூநகரிக்கு அருகில் வைத்துச் சுட்டு வீழ்த்தியிருந்தனர். இந்தச் செயல் அன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், அதேவேளையில் புலிகள் மீது ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

அண்மையில் அரசாங்கத்தின் தடுப்புக் காவலில் இருக்கும் புலி உறுப்பினர் ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையில், கடற்படையினர் சுடப்பட்ட விமானத்தின் சில பகுதிகளை பூநகரிக் கடலில் மீட்டுள்ளனர். இந்த விடயம் மீண்டுமொருமுறை ஊடகங்களில் செய்தியாக இடம் பிடித்து, புலிகளின் மீது மக்களின் வெறுப்பைத் தூண்டி விட்டுள்ளது. மக்களின் மனநிலையைக் கண்டு பொறுக்காத குறித்த கட்சிப் பத்திரிகை, இது பற்றி வெளியிட்ட செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டு விசமத்தனம் செய்துள்ளது. 2012 அக்டோபர் 29ஆம் திகதி 'லயன் எயார் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை' எனத் தலைப்பிட்ட செய்தியில் அது பின்வருமாறு கூறுகின்றது:

'எனினும் அன்றைய காலகட்டத்தில் சிறிலங்கா இராணுவத்திற்குச் சொந்தமான விமானமாக இந்த லயன் எயார் செயற்பட்டது.

'ஆனாலும் பொதுமக்கள் அந்த விமானங்களிலேயே கொழும்பிற்கு சென்று வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு போக்குவரத்தும் நடைபெற்றது.

ஆனால் இவ்வாறான விமானங்களில் பயணத்தினை மேற்கொள்ள வேண்டாம் என பொதுமக்களிடம் விடுதலைப் புலிகள் பல்முறை கோரிக்கை விடுத்தனர் என்பதும் இங்கு குறிப்பிட்டுக் கூறவேண்டிய ஒன்றாகும்'

மோசடியால் வளர்ந்த அப்பத்திரிகையின் இந்தச் செய்தியில் பாரதூரமான பல விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.

ஒன்று - இந்த விமானம் இராணுவத்துக்குச் சொந்தமானது என்ற கூற்று பச்சைப் பொய்யாகும். அது தனியார் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமானதாகும்.

இரண்டாவது - புலிகள் பல தடவை அறிவுறுத்தியும் பொதுமக்கள் அதில் பயணம் செய்ததால், புலிகள் சுட்டு வீழ்த்தியது சரிதான் என்ற கருத்துப்பட அப்பத்திரிகை எழுதியுள்ளது! இது எவ்வளவு மோசமான, மானிட விரோதமான, அந்த விமானத்தில் பயணம் செய்து மரணித்தவர்களின் ஆத்மாக்களை அவதூறு செய்யும் கருத்து!! இந்தச் செய்தி குறித்தும் இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்வது அவசியமானது.

3. மூத்த அரசியல் தலைவர் அலவி மௌலானா அவர்களை இலங்கையில் அறியாதவர்கள் கிடையாது எனலாம். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான அவர் நாடறிந்த தொழிற்சங்கவாதியுமாவார். தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடி பல தடவைகள் பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளானவர். சிறையில் அடைக்கப்பட்டவர். அவரின் தன்னலம் கருதாத சேவையைக் கருத்தில் கொண்டு சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் அவரை மேல் மாகாண ஆளுநராக நியமனம் செய்தது. தற்பொழுது மகிந்தவின் அரசாங்கமும் அவரை மூன்றாவது தடவையாகவும் மேல் மாகாணத்தின் ஆளுநராக நியமித்துள்ளது. அவரது இந்த நியமனத்தை காமாலைக் கண்களால் பார்த்த மேற்படி பத்திரிகை, அச்செய்தியை எப்படி வெளியிட்டது தெரியுமா?

'தனது தள்ளாத வயதிலும் அலவி மௌலானா மூன்றாவது தடவையாகவும் மேல் மாகாண ஆளுநரானார்!'

பாருங்கள்! எம்மையும் விட சிறுபான்மையான ஒரு சமூகத்தைச் சேர்ந்த மூத்த அரசியல் தலைவரை, சிறந்த நிர்வாகியை, அனைத்து இன மக்களினதும் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரை, அப்பத்திரிகை எப்படி அவதூறு செய்கிறது பாருங்கள்!!

பத்திரிகையின் உரிமையாளர் யாழ்ப்பாண மக்களின் பல கோடி ரூபா பணத்தைச் சுருட்டிய 'சப்றா பினான்ஸ்' நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிர்வாகியும், தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமாவார். அலவி மௌலானவைக் கேலி செய்யும் பத்திரிகையை நடாத்தி வரும் அவரிடம் ஒரு கேள்வி.

அலவி மௌலானா தள்ளாத வயதில் இருக்கிறார் என்றால், உங்கள் தலைவர் சம்பந்தன் மட்டும் இளைஞனாகவா இருக்கிறார்?

**அந்தப் பத்திரிகையில் வெளியிடும் செய்திகள் குறித்து அவதூறு, செய்திகளைத் திரித்தல் போன்ற சட்டங்களின் கீழ் இலங்கை அரசாங்கம் ஏன் சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது எனக் கேள்வி எழுப்புவோரும் இருக்கின்றனர். அதேவேளை குறித்த பத்திரிகை இவ்வாறெல்லாம் பத்திரிகைச் சுதந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்தும், எவ்விதமான சட்ட நடவடிக்கைக்கும் உள்ளாகாமல் இருப்பது, இலங்கையில் அதீதமான பத்திரிகைச் சுதந்திரம் இருப்பதன் அடையாளம் என வாதிடுபவர்களும் இருக்கிறார்கள்.**

# ஷிராணி விவகாரத்தில் ஐ.நா. அழுத்தம் இல்லை

## சிங்கள நாளிதழ் தகவல்

(கொழும்பு)

ஷிராணி விவகாரத்தில். ஐ.நா. சபை அரசு மீது இதுவரை எத்தகைய அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை என்றும் எதிர்காலத்திலும் அவ்வாறான அழுத்தங்கள் எதுவும் அரசு மீது திணிக்கப்படார்து என்று ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்ததாக திவயின என்ற சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

பரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு எதிர்காலத்தில் எவ்வித தலையீடும் செய்யப் போவதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினால் குற்றப் பிரேரணை தொடர்பில் ஏற்கனவே பல முறைப்பாடுகள் செய்யபப்பட்டுள்ளன.

எனினும், இது உள்விவகாரப் பிரச்சினை என்பதனால் இந்தப் பிரசசினையில் தலையீடு செய்யப் போவதில்லை என ஐக்கிய நாடுகள் அமைப்பின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக திவயின சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டு வரபபடடுள்ள குற்றவியல் பிரேரணை தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேசத்தின் அழுத்தங்கள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

உள்நாட்டிலும் வெளிநாடுகளில் உள்ள சட்ட அமைப்புக்கள் தமது கண்டனங்களை வெளியிட்டு வருகின்றன. இந்த நிலையில் கடந்த வார இறுதியில் பொதுநலவாய நாடுகளின் பொதுச்செயலாளர் கமலேஸ் சர்மா, வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் தொலைபேசியில் தொடர்புக் கொண்டு தமது கரிசனையை வெளிப்படுத்தியுள்ளார். இதன்போது அவர் இலங்கையில் நீதித்துறையின் அடிபபடை அம்சங்கள் பேணப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதம நீதியரசரின் விடயத்தை சர்வதேச நாடாளுமன்றக்குழுவின் கவனத்துக்கு கொண்டு செல்லவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பரீட்சை மோசடிகள் ; இதுவரை 15 முறைப்பாடுகள்

(கொழும்பு)


இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் போது இடம்பெற்ற மோசடிகள் குறித்து இதுவரை 15 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சார்த்திகளுக்குப் பதிலாக வேறு நபர்கள் பரீட்சையில் தோற்றியமை உள்ளிட்ட மோசடிகள் தொடர்பில் இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ள தாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஸ்பகுமார கூறியுள்ளார்.

இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை பரீட்சைகள் திணைக்களத்திலிருந்து சாதாரண தரப் பரீட்சை நிமித்தம் வெளிமாவட்டங்களுக்கு சென்றுள்ள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய பரீட்சை நிலையங்களை அண்மித்த பகுதிகளில் நேற்றுமுன்தினம் நடத்தப்படவிருந்த கூட்டங்கள் மற்றும் வைபவங்கள் சிலவற்றை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஸ்பகுமார மேலும் கூறியுள்ளார்.

# அழுத்தங்களுக்கு அடிபணிய மாட்டோம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முழக்கம்



(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணை விடயத்தில் எந்தவொரு நாடும் எமக்கு அழுத்தத்தைக் கொடுக்கவில்லை. நாம் எத்தகைய அழுத்தத்திற்கும் ஒருபோதும் அடிபணியவும் மாட்டோம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களைச் சந்தித்துரையாடிய போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார். இது தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களால் மதிக்கப்படும் கௌரவமான சட்டத்தரணிகள் இன்று அந்தப் புனிதமான உயர் பதவிக்குரிய சீருடையான கறுப்புக் கோர்ட்டுக்களை அணிந்து கொண்டு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் போன்று வீதிகளிலிறங்கி சுலோகங்களைத் தாங்கி ஆர்ப்பாட்டம் செய்கின்றனர.

இது மிகப் பெரும் தவறு. பதவிக்கான சீருடையை அணிந்து கொண்டு அரசியல் செய்வது அருவருக்கத்தக்க செயல்.

இவ்வாறு செயற்படும் அவர்கள் யாரென்று பார்த்தால் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியைச் சார்ந்தவர்களே என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

முன்னரும் இவ்வாறுதான் சீருடை அணிந்த ஒருவர் என்னுடன மோதினார். ஆனால் அவர் உண்மையில் சீருடையில இருக்கும்போது அரசியல் பேசவில்லை. என்னுடன் கருத்து முரண்பட்டபின் களனி விகாரைக்குச் சென்று சீருடையைக் களைந்து வெள்ளை உடை அணிந்த பின்னரே அரசியல் பேசினார். அது எவ்வளவோ பரவாயில்லை என்றும்'ஜனாதிபதி தெரிவித்தார்.

எது எவ்வாறிருப்பினும் ஜனநாயக நாட்டில் ஜனநாயக ரீதியில் செயற்பட சகலருக்கும் உரிமை உள்ளது. அரசாங்கம் அதில் ஒருபோதும் தலையிடாது.

ஆனால் அரச அதிகாரி ஒருவர் தவறினைச் செய்.நுள்ளதாகக் குற்றம் சாட்டப்ப..டால் முதலில் அவர் உடனடியாகவே பதவிநீக்கம் செய்யப்படுவார். அவரது ஊதியம் நிறுத்த..படும் அல்லது அரைமாதச் சம்..ளமே வழங்கப்படும். விசாரணையின் முடிவிலேயே தீர்ப்பு வழங்கப் படும்.

சொத்துக்களை முறையாக அறிவிக்காது மறைத்த பல அரச அதிகாரிகள் சிறைக்குப் போன சம்பவங்களும் இந்நாட்டு வரலாற்றில் உள்ளது.

பிரதம நீதியரசருக்கான குற்றப்பிரேரணை விடயத்தில் எந்தவொரு நாடும் எமக்கு அழுத்தத்தைக் கொடுக்கவில்லை. நாம் எத்தகைய அழுத்தத்திற்கும் ஒருபோதும் அடிபணியவும் மாட்டோம். உண்மையில் இந்தக் குற்றப் பிரேரணைக்கு வித்திட்டது ஐக்கிய தேசியக் கட்சிதான்.

இன்று அவர்கள் இதற்கு எதிராக நிற்கின்றனர்.ஆனாலும் நாம் அரசியலமைப் பிற்கிணங்கவே இதனை முன்னெடுத்து வருகின்றோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# எரிபொருள் திருட்டு மோசடிக்குழு சிக்கியது

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பவுசர்களில் இருந்து எரிபொருளைத் திருடி விற்பனை செய்யும் குழுவொன்று தொடர்பான தகவல்களை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

பவுசர்களில் இருந்து திருடப்பட்ட எரிபொருளை விற்பனை செய்வதற்கு முயற்சித்த ஏழு சந்தேகநபர்கள் சிலாபம் ஆனைவிழுந்தான் மற்றும் ஆராச்சிக்கட்டு ஆகிய பிரதேசங்களில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மூன்று பவுசர்களில் ஏற்றிச் செல்லப்பட்ட எரிபொருளின் ஒரு பகுதியை சந்தேகநபர்கள் திருடியுள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இலங்கை பெற்றோலிக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பவுசர்களின் சாரதிகள் மற்றும் உதவியாளர்களாக கடமையாற்றிய ஆறு பேரும் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு வந்திருந்த 'ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 176 லீற்றர் டீசலை விற்பனை செய்வதற்கு முயற்சித்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## புனர்வாழ்வு பெறாத புலிகளை அடையாளம் காண நடவடிக்கை


இதுவரை புனர்வாழ்வு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படாத முன்னாள் புலிப்போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக அவ்வாறானவர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது. புனர்வாழ்வு அளிக்கப்படாத விடுதலைப் புலி உறுப்பினர்கள் குழப்பங்களை விளைவித்து வருவதாகவும் குற்றம் சுமத்தப்படுகிறது.

இதுவரை காலமும் புனர்வாழ்வு அளிக்கப்படாத புலி உறுப்பினர்கள், ஏற்கனவே புனர்வாழ்வு அளிக்கப்பட்ட புலி உறுப்பினர்களுக்கு தொந்தரவு கொடுத்து வருவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனவே புனர்வாழ்வு அளிக்கப்படாத யாழ்ப்பாணத்தில் வாழும் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளின் மூலம் இந்த விடயம் தற்போது தெரிய வந்துள்ளது.

# வறுமையில் வாடும் மக்களின் வயிற்றில் அடிக்கிறது அரசு

## பெற்றோல் விலை உயர்வுக்கு கண்டனம்



(கொழும்பு)

வறிய மக்களின் வயிற்றில் அடிக்கும் செயல்களை அரசு தொடர்ந்து செய்து வருவதாக அரசு மீது ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

பெற்றோல் விலையினை 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டமையானது வறுமைக் கோட்டின் கீழ் உள்ள சாதாரண மக்களின் உணர்ச்சிகளை தூண்டிவிடும் செயல் என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

70 வீதமான வாகனங்கள் பெற்றோலினால் இயங்குபவை எனவும் அவற்றில் 65 வீதமானவை மோட்டார் வண்டிகள் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

பெற்றோல் விலை அதிகரிப்பின் காரணமாக மோட்டார் மற்றும் துவிச்சக்கர வண்டிகளை பயன்படுத்தும் சாதாரண மக்களை அரசு மேலும் வறுமைக்குள் தள்ளி விட்டுள்ளது என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 90 ஒக்டெயின் பெற்றோல் ஒரு லீட்டரின் விலையை நேற்று முன்தினம் 10 ரூபாவால் அதிகரித்துள்ளது.

இதன்படி ஒரு லீற்றர் பெற்றோலின் புதிய விலை 159 ரூபா ஆகும்.

# திருட்டுக் கும்பல் சிக்கியது

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற தொல்பொருள் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 11 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வெல்லவாய, புத்தல, பதுளை ஆகிய பகுதிகளில் தொல் பொருள் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக இந்த சந்தேக நபர்கள் பொலிஸாரால் தேடப்பட்டு வந்ததாக தொல்பொர்ருள் பாதுகாப்புப் பிரிவின் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கூறினார். புதையல் தோண்டுவதற்காக சந்தேகநபர்கள் பயன்படுத்தியதாக கூறப்படும் பெக்கோ இயந்திரம் மற்றும் லொறி என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# செயற்கை கடற்கரை தெற்கில் அமைக்க முடிவு

(கொழும்பு)

காலி முகத்திடலில் இருந்து கல்கிசை வரையில் செயற்கை கடற்கரையொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக கரையோரப் பாதுகாப்பு மற்றும் கடற்கரை வள முகாமைத்துவ திணைக்களம் தெரிவிக்கின்றது.

இதற்கமைய சுமார் 240 ஏக்கரிலான செயற்கை கடற்கரையை நிர்மாணிப்பதற்கு எண்ணியுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அனில் பிரேமரத்ன குறிப்பிட்டார்.

இந்த செயற்கைக் கடற்கரை சுமார் பத்து கிலோமீற்றர் தூரம் கொண்டதாக அமையவுள்ளது எனவும் அவர் கூறினார்.

இதற்கான ஆய்வுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் செயற்கை கடற்கரை நிர்மாணப்பணிகளை 2015 ஆம் ஆண்டிற்குள் நிறைவுசெய்ய எண்ணியுள்ளதாக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



வதிரி மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது சிறார்களின் நடன நிகழ்வைக் காணலாம். (90)

# பொலிஸாரின் நடமாடும் சேவையால்

# ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பயன்பெற்றனர்

## - பொலிஸ் பொறுப்பதிகாரி

(வடமராட்சி)

பருத்தித்துறை பொலிஸார் ஒவ்வொரு மாதமும் நடாத்தப்பட்டு வரும் நடமாடும் சேவையில் இதுவரை சுமார் 1000 இற்கு மேற்பட்ட பொது மக்கள் கலந்து பயன் பெற்றுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரித்தவுஸ் தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

வடமாகாண உதவிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேராவின் பணிப்புரைக்கமைய பொது மக்களின் நலன் கருதிய சினேகபூர்வமான பொலிஸ் சேவையான நடமாடும் சேவையில் பல்வேறுபட்ட தேவைகளை குறுகிய நேர காலத்தில் நிவர்த்தி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள கிராம மட்ட பிரச்சினைகள், அடையாள அட்டை காணமல்போய் மீளப் பெறுவதற்கான வழிமுறைகள், போக்குவரத்து ஒழுங்கு விதிசட்ட திட்டங்கள், மருத்துவ சேவை, பொலிஸ் பொது மக்கள் நல்லுறவு சம்பந்மான விரிவுரைகள் மற்றும் பாலுணர்வு குற்றங்களைத் தடுப்பதற்கான பாடசாலை மாணவர்களின் பங்களிப்பு, ஆசிரியர் பெற்றோர்கள் சமூக நலன் விரும்பிகளின் பங்களிப்புடன் அறிவுரைகள், ஆலயம், வீடுகளில் நடைபெற்றுவரும் திருட்டுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்பதற்குமான ஆன்மீகவாதிகளின் பங்களிப்பு நடவடிக்கை வீட்டுத் தோட்ட கால போக பயிர்ச்செய்கை விதைகள் போன்றன வழங்கப்பட்டதுடன், மருத்துவ சேவையில் இதுவரை 300 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரச வைத்திய அதிகாரிகளான டாக்டர் சஜீவன், டாக்டர் அன்ரன் சுதாகரன், டாக்டர் திருமதி சரோஜா சிவனேசன் ஆகியோர்களின் மருத்துவ ஆலோசனைக்கு உதவி புரிந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பொலிஸாரின் நடமாடும் சேவையின் மூலம் குடத்தனை கிறிஸ்தவப் பாடசாலை, பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம், துன்னாலை மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, வியாபாரி மூலை மேலைப் புலோலி வித்தியாலயம், அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா தமிழ்க் கலவன் பாடசாலை, செம்பியன் பற்று தமிழ்க்கலவன் பாடசாலை, கலட்டி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, தம்பசிட்டி வித்தியாலயம், நாகர் கோவில் மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளை அண்டிய பகுதி மக்கள் இவ்வாறு பயன் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளதுடன் இவ்வாறான பொது மக்கள் நலன் கருதிய நடமாடும் சேவைக்கு ஒத்துழைப்பு நல்கிய அரச மருத்துவர்கள், கல்வி அதிகாரிகள், பிரதேசம் சார்ந்த சிவில் நிர்வாக உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார். (116)

# பரமர் சங்கமம்



'கம்பெடுத்தவன் எல்லாம் சண்டியன்' என்பது போல் 'பொல்லைக் குடுத்து அடிவாங்கிற' சங்கதிகளும் இருக்கத்தான் செய்கிறது.

பரந்த அரசியல் உலகில் காலத்துக்குக் காலம் அங்கங்கே அதிபுத்தி கூடிய அரசியல் மேதாவிகள் தோன்றி மறைந்துள்ளதை வரலாறுகள் கூறுகின்றன.

தமிழில் தென்னாலிராமன் போன்று சிங்கள மக்கள் மத்தியில் புஞ்சி, லொக்கு ஹாமிகளும், பாரசீக வரலாற்றில் பீர்பால் போன்றவர்களின் அதிபுத்தி வாய்ந்த அதேவேளை வெகுளித்தனமான பாத்திரங்கள் வாழ்ந்ததையும் படித்துள்ளோமல்லவா?

இவர்களெல்லாம் சாதாரணிகளாகத் தோன்றி தங்களின் அரசியல் சாணக்கிய தந்திரோபாயங்களால் மந்திரி பிரதானிகளாக உயர்வடைந்ததையும் வாசிக்கிறோம்.

தமிழ் சினிமாக்களில் தற்கால, பழைய திரைப்பட்ங்களில் கதாநாயகனுக்கு நெருங்கிய சகபாடியாக இத்தகைய பாத்திரங்கள் படைக்கப்படுவதுண்டல்லவா?

உக்கிரமான சண்டைக் காட்சியில் கதாபாத்திரம் முக்கிய வில்லனுடன் மோதும் சம்பவங்களுக்கு இடையே அவனது சகபாடிகளுடன் இந்தப் புத்திசாலிகளும் வாள், மற்போரில் ஈடுபடுவதைப் புகுத்தி ரசிகர்களைப் குஷிப்படுத்துவார்கள்.

அவ்வாறு இலங்கை இந்திய அரசியல் வானில் தற்காலத்தில் மேர்வின் சில்வா, சுப்பிரமணிய சுவாமி இருவரும் காமடி பாத்திரங்களாக அதிதீவிர புத்திசாலிகளாக வலம் வருவது கண்கூடு.

சமீபத்தில் 'நானே அதிவல்லமையுள்ள தலைவன்' என்ற கருத்தைக் கூறி அசத்தினார் அமைச்சர் மேவின் சில்வா அடிக்குடனே 'களனிப்பிரதேசத்தினுள்' எனவும் புசத்தினார்.

இவர அரசியல் ஸ்ரண்டுகள் ஊடகவியலாளரை மிரட்டியது. சமுர்த்தி உத்தியோகத்தரைக் கட்டி வைத்தது. இந்துக் கோவில் வேள்வியில் நுழைந்து ஆடு, கோழிகளை கொண்டு போன தெண்டு கனக்க.

1987 இல் இந்திய அமைதிப்படை இலங்கை வரமுன்னதாக நூறு வள்ளங்களில் உணவு, மருந்துப் பொருட்களை ஏத்திக் கொண்டு வெளிக்கிட்ட சுப்பிரமணிய சுவாமியை இந்தியக் கடற்படை தடுத்து நிறுத்தியதில் இருந்து அவரின் அரசியல் அதிரடிகள் தொடங்கின.

சமீபத்தில் கொழும்புக்கு விருந்தாளியாக வந்து போனவர் சாப்பிட்டதுக்காக சில வார்த்தைகளை உதிர்த்து இருந்தார். 'இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை. வர்க்கப்பிரச்சினையே உள்ளது'.

'தமிழர் அதிகமாக வாழும் இடங்களில் சிங்களவர்களையும், சிங்களவர் அதிகமாகவுள்ள பகுதிகளில் தமிழர்களையும் குடி இருத்த வேண்டும்' இப்படி கூறியுள்ளார்.

கடைசியாக இவர் சொல்லியுள்ள இராஜதந்திரம் இது. 'புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் இந்தியத் தமிழர் அங்கே வாழும் இலங்கைத் தமிழர்களுக்குப் புத்தி சொல்ல வேண்டும்'. என்கிறார். இப்ப ஆரும் சொல்லுற புத்தியைக் கேட்டு நடக்கிற மாதிரியே உலக மக்கள் இருக்கிறார்கள்? கனக்க வேண்டாம் இவருக்கு நாங்க சொல்லுற புத்தியைக் கேப்பாரா சுப்பிரமணிய சுவாமி...? என்ன நான் சொல்லுறே...

## புதிய நிர்வாகத்தெரிவு

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் தலைவர் இ.சிவநாதன் தலைமையில் வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது.

புதியாண்டுக்கான தலைவராக நா.ஜெயகநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன் 5 பேர்கள் கொண்ட நெறியாளர் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பொதுக் கூட்டத்திற்கு யாழ். மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் மற்றும் கூட்டுறவுத்திணைக்கள அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர். (05)

## ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் ஒளிவிழா நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மாநகர சபை அலுவலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி.யோகேஸ்வரிபற்குணராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# முரசின் இன்றைய பலன்


(17.12.2012 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 02 ஆம் திகதி. நட்சத்திரம் திருவோணம் பிற்பகல் 2.04 வரை. திதி பஞ்சமி பின்னிரவு 5.37 வரை. சதுர்த்தி காலை 6.55 வரை. இராகுகாலம் 7.53 - 9.23 வரை. சுபநேரம் 12.23 - 1.53 வரை. அமிர்தசித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | ஆற்றலுடன் செயல்படுகை. நிதானமும், செயல் திறனும் அதிகரிக்கும். உபரி வருமானம். குடும்பத் தேவை பூர்த்தி. நண்பருக்கு உதவி. மதிப்பு. |
| ரிஷபம் | பிரச்சினையாக இருந்தவைக்கு தீர்வு கிடைக்கும். ஆரோக்கியம். புத்துணர்வு. தொழில் முன்னேற்றம். உபரி பணவருமானம். தாய்வழி உறவினரால் நன்மை. |
| மிதுனம் | மனதிலும், உடலிலும் வேகம். வேலையில் முழுமூச்சு. தொழில், வளர்ச்சி. உபரி வருமானம். வெளியூரிலிருந்து சுபசெய்தி. கேட்ட உதவிகள். |
| கடகம் | குடும்பத்தை பற்றிய கவலைகள். பணிகளில் குளறுபடி, தாமதம் இருக்கும். பொறுமை நன்மை தரும். மிதமான பணவரவு. மாமன், மைத்துனர் உதவி. எல்லோரிடமும் பரிவு. |
| சிம்மம் | வாழ்க்கைத்தரம் மேம்படும். சார்ந்தோர்க்கு உதவுவீர்கள். தொழில், புதிய பரிமாணம். இலாபம் அதிகரிக்கும். உடல் பலம் பெறும். விருந்து விசேஷம். |
| கன்னி | தடை கண்டு தளரமாட்டீர்கள். தாயாரில் கவனம். வீடு, வாகன செலவுகள். புது நட்பு. சக ஊழியர்களால் நிம்மதி. கடன் நேரும். தியானம், வழிபாடு. போட்டி. |
| துலாம் | மன உளைச்சல். முன்கோபத்தை அடக்கவும். பணம் தாமதம். வேலைச்சுமை. முன்யோசனையுடன் செயல்படுவீர்கள். புத்திரர் விரும்பியது,வாங்குதல். |
| விருச்சிகம் | மறதியால் சிரமம். எதிர்பார்த்த உதவி தாமதம். நம்பிக்கை வெற்றி தரும். தொழில், அனுகூலம். அளவான பணவரவு. சேமிப்பு, செலவுக்கு பயன்படும். |
| தனுசு | புதிய வேகமும், விவேகமும் இருக்கும். பெற்றோரின் விருப்பம் நிறைவேற்றுதல். புதுத் தொழில் ஆர்வம். சிந்தனைத் திறன் பெருகும். சொத்து சேர்க்கை. |
| மகரம் | உண்மை, நேர்மை உதவும். சமூக மதிப்பு உயரும். தொழில் வளர அனுகூலம் வரும். பணவரவு திருப்தி. இல்லறத்துணை மகிழ்வு. ஓய்வும் இசை ரசிப்பும். |
| கும்பம் | குடும்பத்தார் ஆதரவு. உறவினர் தொல்லை குறையும். சேமிக்க தொடங்குவீர்கள். ஆன்மிக நாட்டம். புது தொழில். முக்கிய முடிவுகள். நினைத்தது நிறைவேறும். |
| மீனம் | பிறர் வியப்புடன் பார்க்கும் நிலை. பணவரவும் நன்மையும். சொத்து சேர்க்கை. தெய்வ வழிபாடு. அலுவலகத்தில் பாராட்டு. பணி விரைந்து முடியும். |

## சாய்னா வெளியேற்றம்



(ஷென்ஸ்ஹென்)

சூப்பர் சீரிஸ் இறுதி பட்மின்ரன் தொடரின் அரையிறுதியில் இந்திய வீராங்கனை சாய்னா நேவல் தோல்வியடைந்தார்.

சீனாவில் உள்ள ஷென்ஸ்ஹென் நகரில், சூப்பர் சீரிஸ் இறுதி பட்மின்ரன் தொடர் நடக்கிறது. சர்வதேச பட்மின்டன் தரவரிசை முதல்-8 இடத்தில் உள்ள வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

பெண்கள் ஒற்றையரில் இரண்டாவது அரையிறுதி போட்டியில் இந்தியாவின் சாய்னா நேவல், சீனாவின் ஜியுருய் லியை சந்தித்தார். இதன் முதல் செட்டில் 20-16 என முன்னிலை பெற்ற சாய்னா, கடைசியில் 20-22 என, இழந்தார்.

இரண்டாவது செட்டில் அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்திய சாய்னா 21-7 என, வென்றார்.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது மற்றும் கடைசி செட்டை 13-21 என கோட்டை விட்டார். முடிவில், சாய்னா நேவல் 16-21, 21-7, 13-21 என்ற கணக்கில் தோல்வியடைந்தார்.

## டில்சான் சதம் மீண்டது இலங்கை



(ஹோபர்ட்)

டில்சான், மத்தியூஸ் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தில் மூலம் அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி நெருக்கடியிலிருந்து மீண்டுள்ளது.

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி அவுஸ்ரேலியாவின் ஹோபர்ட் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதலாவது இனிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றிருந்நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை இலங்கை அணி தொடர்ந்தது. அணியின் நெருக்கடியை உணர்ந்த டில்சான், மத்தியூஸ் ஆகியோரும் பொறுப்பாக ஆடியதுடன், அவுஸ்ரேலிய அணிப் பந்தவீச்சையும் பதம் பார்த்தனர். ஐந்தாவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 161 ஓட்டங்களைப் பெற்ற வேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து வந்தவர்களும் ஓரளவுக்கு நிலைத்து நின்று ஆடி அணியை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றனர். இறுதியில் இலங்கை அணி, முதலாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 336 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டில்சான் 237 பந்துகளை எதிர்கொண்டு 21 பவுண்டரிகள் அடங்கலாக 147 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் டில்சான் பெற்ற 15ஆவது சதமாக இது அமைந்தது. மத்தியூஸ் 186 பந்துகளை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 75 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் பிரசன்ன ஜெயவர்த்தன 40, குலசேகர 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பீற்றர் சிடில் ஐந்து, லம் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

114 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் அவுஸ்ரேலிய அணி, நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டவேளை, விக்கெட் இழப்பின்றி 27 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அவுஸ்ரேலிய முதல் இனிங்ஸ் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 450 ஓட்டங்களைப் பெற்றது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## கபடியில் இந்தியா ஹட்ரிக்



(லூதியானா)

உலக கோப்பை சர்க்கிள் கபடி இறுதிப் போட்டியில் அசத்தலாக ஆடிய இந்திய ஆண்கள் அணி, பாகிஸ்தானை வீழ்த்தியது. இதன் மூலம் தொடர்ந்து மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

பஞ்சாப்பில் உள்ள லூதியானாவில் உலக கோப்பை சர்க்கிள் கபடி தொடர் நடந்தது. நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில், இந்திய வீரர்கள் முழுமையாக ஆதிக்கம் செலுத்தினர். முதல் பாதி முடிவில் 34-9 என வலுவான முன்னிலை பெற்றனர். இரண்டாவது பாதியிலும் மிரட்டிய இந்திய அணி 59-22 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்று, கோப்பையை தக்க வைத்துக் கொண்டது. தொடர்ந்து மூன்றாவது முறையாக (2010,11,12) கோப்பை வென்று புதிய வரலாறு படைத்தது.

சம்பியன் பட்டம் வென்ற இந்திய அணி ரூ. 2 கோடி பரிசைத் தட்டிச் சென்றது. இரண்டாவது இடம் பிடித்த பாகிஸ்தான் அணிக்கு ரூ. 1 கோடி பரிசு அளிக்கப்பட்டது.

இதேவேளை, பெண்கள் பிரிவிலும் இந்தியா கோப்பை வென்றது. நேற்றைய இறுதிப் போட்டியில் மலேசியாவை சந்தித்தது. தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய இந்திய பெண்கள் அணி, முதல் பாதியில் 42-6 என முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியிலும் மிரட்டிய இந்திய பெண்கள் அணி, 72-12 என்ற கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றது.

## தடம்புரண்டாலும் தளராது தன்னம்பிக்கை



(நாக்பூர்)

சிறப்பாக விளையாடாவிட்டாலும் தன்னம்பிக்கையுடன் இருப்பது மிக முக்கியம். அதைத்தான் நான் செய்து வந்தேன். அதற்கான பலன் நாக்பூரில் கிடைத்திருப்பதில் மகிழ்ச்சி என ஹோலி தெரிவித்தார்.

நீண்ட இனிங்ஸிற்காகவே நான் காத்திருந்தேன். கடந்த ஒரு மாதமாகவே கடினமாக பயிற்சி செய்து வந்தேன். எல்லா இனிங்ஸிலும் பெரிய ஓட்ட எண்ணிக்கையை அடித்துக் கொண்டிருக்க முடியாது. ஏற்ற இறக்கம் இருப்பது சகஜம். சிறப்பாக விளையாடாவிட்டாலும் தன்னம்பிக்கையுடன் இருப்பது மிக முக்கியம். அதைத்தான் நான் செய்து வந்தேன். அதற்கான பலன் கிடைத்துள்ளது. மனரீதியாக வலுவாகவே உள்ளேன். மூன்று முறை இருபது ஓட்டங்களுக்கு அதிகமாக எடுத்தும் அதைப் பெரிதாக பயன்படுத்திக் கொள்ள தவறிவிட்டேன். ஆனால், ஒருபோதும் நம்பிக்கையை இழக்கவில்லை. மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது பற்றியும் கவலைப்படவில்லை. இது மிகவும் முக்கியமான இனிங்ஸ். டெஸ்ட் போட்டியில் சிறப்பாக விளையாட வேண்டும் என்பதில் மிக உறுதியாக உள்ளேன். நியூசிலாந்துக்கு எதிராக நல்ல ஆட்டத்திறனுடன் இருந்தேன். தொடர்ச்சியாக அதிக ஓட்டங்கள் குவிப்பது எளிதாக இருந் தது. இங்கிலாந்துக்கு எதிராகவும் அதே போல விளையாட வேண்டும் என விரும்பினேன். சற்று பதற்றத்துடன் விளையாடியதால் தேவையில்லாமல் விக்கெட்டை பறிகொடுக்க நேரிட்டது.


டோனியுடன் சேர்ந்து போராடி அணியை மீட்டது மகிழ்ச்சி அளிக்கிறது. இது போன்ற சவால்கள் எனது திறமையை மேலும் மெருகேற்ற உதவும் என நினைக்கிறேன். டோனி 99 ஓட்டங்களில் ஆட்டமிழந்து சதத்தைத் தவறவிட்டது துரதிஷ்டவசமானது. இந்த ஆடுகளத்தில் 2ஆவது இனிங்ஸில் விளையாடுவது அத்தனை சுலபமல்ல என நினைக்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஆக்ரோஷமாக ஆடுங்கள்

(லாகூர்)

இந்தியாவிற்கெதிரான தொடரில் துடுப்பாட்ட வீரர்கள் ஆக்ரோஷமாக ஆட வேண்டும் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும், துடுப்பாட்ட ஆலோசகருமான இன்ஸமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார். இந்தியாவிற்கெதிராக எந்த அணி ஆக்ரோக்ஷமாக ஆடுகிறதோ அவ்வணி சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தும். என்னைப் பொறுத்தவரை எனது அனுபவங்களை பாகிஸ்தான் வீரர்களுடன் பகிர விரும்புகின்றேன். இந்தியாவிற்கெதிரான தொடரில் அவர்கள் விளையாடும் போது அவர்களுக்கு உதவியாக எனது அறிவுரைகள் அமையும் என எதிர்பார்க்கின்றேன். பாகிஸ்தான் வீரர்கள் இந்தியாவிற்கெதிராக அதிகமான போட்டிகளில் பங்குபற்றியுள்ளனர். அழுத்தமான சூழ்நிலைகளை எதிர்கொள்ள அவர்களை பழக்கப்படுத்துவவே எனது நோக்கம். இந்தியாவிற்கெதிரான தொடரில் யார் அழுத்தங்களை சிறப்பாக எதிர்கொண்டாலும் அவர்கள் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்துவர் எனவும் மேலும் தெரிவித்தார்.

## அசத்துவர் அஜ்மல்



இந்திய அணிக்கெதிரான தொடரில் சயீத் அஜ்மல் அசத்துவார் என பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் டேவ் வாட்மோர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இங்கிலாந்து அணிக்கு எதிராக இந்தியா தடுமாறி வருகிறது என்பதற்காக, அந்த அணியை குறைத்து மதிப்பிட முடியாது. இங்கிலாந்து அணி தற்போது சிறப்பான ஆட்டத்திறனுடன் உள்ளது. தொடரை சமன் செய்ய இந்தியா கடுமையாகப் போராட வேண்டி இருக்கும். டெஸ்ட் தொடரில்தடுமாறுவதால் இந்தியா பலவீனமான அணி என்று அர்த்தமில்லை. கடந்த பல ஆண்டுகளாக இந்தியா சிறப்பாக விளையாடி வந்துள்ளது என்பதை மறந்துவிடக் கூடாது. அதே சமயம் ருவென்ரி-20, ஒருநாள் போட்டிகளில் இந்தியாவை அலட்சியப்படுத்துவது ஆபத்து. பாகிஸ்தான் வீரர்கள் கொஞ்சம் அசந்தாலும் இந்தியா போட்டுத் தாக்கிவிடும். அணியில் இடம் பெறும் வீரர்கள் குறித்து ஆடுகளத்தின் தன்மை பற்றி அறிந்த பிறகே முடிவு செய்ய முடியும். சுழற் பந்து வீச்சாளர் சயீத் அஜ்மல் எங்களுக்கு துருப்பு சீட்டாக இருப்பார் என நம்புகிறேன். கடந்த ஆண்டு நடந்த உலக கோப்பை போட்டியின் அரையிறுதியில் இந்தியாவுக்கு எதிராக அவர் மிகச்சிறப்பாக பந்துவீசினார். இந்தமுறையும் அவர் விக்கெட் வேட்டை நடத்துவார் என எதிர்பார்க்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

## இங்கிலாந்து முன்னிலை




(நாக்பூர்)

இந்திய அணிக்கெதிரான நாக்பூர் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 164 ஓட்டங்களால் முன்னிலையிலுள்ளது. இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி நாக்பூரில் நடைபெற்று வருகின்றது.

இதில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை இந்திய அணி தொடர்ந்தது. இந்திய அணி மேலும் 32 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஒரு விக்கெட்டை இழந்தது. இறுதியில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 326 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது இந்திய அணி ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் அஸ்வின் ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ஹோலி 103, டோனி 99 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன் நான்கு, ஸ்வான் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

நான்கு ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி வரும் இங்கிலாந்து அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, மூன்று விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ட்ரொட் 66, இயன் பெல் 24 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். பந்துவீச்சில் அஸ்வின், ஓஜா, ஜடேஜா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இன்று போட்டியின் இறுதி நாளாகும். இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 330.

## விளையாட்டுச் செய்திகள்



ஊர்காவற்துறை மெலிஞ்சிமுனை கிறிஸ்துவ அரசர் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா பங்குத்தந்தை மரியதாஸ் தலைமையில் நடை பெற்றது. இப்போட்டி நிகழ்வின்போது சிறார் களின் வண்ணமயமான விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பார்வையாளர்களை யும் பரவசப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக மெலிஞ்சிமுனை றோ.கபாடசாலை அதிபர் கென்றி, ஊர்காவற் றுறை பிரதேச தலைவரும் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் பிரதேச அமைப்பாளருமான ம.ஜெயகாந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# பாணந்துறை றோயல் கல்லூரியை வென்றது சென். ஜோன்ஸ்

(பாணாந்துறை)

பாணந்துறை றோயல் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் யாழ். சென். ஜோன்ஸ் கல் லூரி அணி 31 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 19 வயதுப்பிரிவு அணி கொழும்பு பாடசாலைகளு டன் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட சிநேகபூர்வ துடுப்பாட்டப் போட்டிகளில் தற்போது விளையாடி வருகின்றது.

நேற்று முன்தினம் ஹொரணை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியொன்றில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 19 வயதுப்பிரிவு அணி பாணந்துறை றோயல் கல்லூரியுடன் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல் லூரி அணி 41 பந்துபரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 199 ஓட்டங்களைப் பெற் றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அமிடஜன் 49 ஓட்டங்களையும், பிருந்தாபன் 42 ஓட்டங்களையும், கிருத்திகன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத் தனர். பந்துவீச்சில் தனஞ்சயன் 4, விமுக்தி மதுச 3, துசாந் விமுக்தி 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 200 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற இலக்குடன், களமிறங்கிய பாணந்துறை றோயல் கல்லூரி அணி 40.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்கைளயும் இழந்து 168 ஓட்டங்களை பெற்று 31 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் ஜாஜித் சமட் 48, டினஞ்ச 27, சமீர 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் சிவலக்ஸன் 3, பிரவீன்சாந் 3, கவாஸ்கர் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

## விரைவில் றக்பி போட்டி

(யாழ்ப்பாணம்)

மாகாண பாடசாலை அணிகளுக்கிடையிலான றக்பி போட்டித் தொடர் ஒன்றை விரைவில் நடத்த வடமாகாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் தீர்மானித்துள்ளது.

றக்பி போட்டிகள் வடமாகாணத்தில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள நிலையில், வீரர்களை மேலும் உற்சாகப்படுத்தும் வகையில் இப்போட்டியை நடத் துவதற்கு போட்டி அமைப்பாளர்கள் தீர்மானித்துள் ளனர். இப்போட்டி அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இடம்பெற அதிக வாய்ப்பு இருப்பதாகத் தெரி விக்கப்படுகின்றது. (எஸ்.பி.)

## தீவகத்தில் விளையாட்டுப் போட்டி

(வேலணை)

அல்லைப்பிட்டி டென்போஸ்கோ இளையோர் கழகத்தினால் கிறிஸ்மஸ் ஒளிவிழாவை முன்னிட்டு தீவகத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ விளையாட்டுப் போட்டிகளை நடத்த வுள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதி அல்லைப்பிட்டி கிராமத்தில் இப்போட்டி இடம்பெறவுள்ளது. இதில் கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், மென் பந்து கிரிக்கெட் போன்ற விளையாட்டுப் போட்டி கள் இடம்பெறவுள்ளதாகவும், இதில் வெற்றியீட்டும் அணிகளுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ள தாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, அன்றைய தினம் மாலை அல்லைப்பிட்டி டென்போஸ்கோ இளையோர் கழ கத்தில், திருமணம் செய்தவர்களுக்கும், திருமணம் செய்யாதவர்களுக்குமான கயிறு இழுத்தல் மற்றும் பொதுமக்களுக்கிடையிலான கிடுகு பின்னுதல், மாலை கட்டுதல் போன்ற போட்டிகள் நடத்தப்படவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். (05)

# கிளிநொச்சி இந்துவுக்கு முதல் வெற்றி

(கிளிநொச்சி)

வவுனியா கலைமகள் மகாவித்தியாலய அணிக்கெதிரான இனிங்ஸ் போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்று சாதனை படைத்துள்ளது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் பிரிவு மூன்றின் 13 வயது பிரிவு அணிகளின் அணியினருக்கு இடையிலான இனிங்ஸ் கிரிக்கெட் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இச்சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியினை எதிர்த்து வவுனியா கலை மகள் மகா வித்தியாலயம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா கலைமகள் மகா வித்தியாலயம் முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 27 ஓட்டங்களுக்குச் சகல விக் கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் எந்தவொரு வீரரும் நிலைத்து நின்று ஆடவில்லை. பந்துவீச்சில் கிளிநொச்சி டினேஸ் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸிற்காக ஆடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 36 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்ட வீரர்கள் ஒற்றை ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் கெனுசன் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

9 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற் காக ஆடிய கலைமகள் மகா வித்தியாலயம் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஞ்சீவன் 32 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 62 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய கிளி நொச்சி இந்துக் கல்லூரி அணி 26 ஓவர்களில் மூன்று விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகள் ஆன நிலையில் உருவாக்கப்பட்ட முதல் கிரிக் கெட் அணியே மேற்படி வெற்றி அணி ஆகும். இவ்வணி இவ்வெற்றியினை முதல் போட்டியிலேயே பெற்றுள்ளது.



ஆளுநர் வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்து கிரிக்கெட் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட கல்வி அமைச்சு அணியைக் காணலாம். கல்வியங்காடு ஜி.பி.எஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் பிரதம செயலக கொத்தணி அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (படம்: நந்தகுமார்)

## பலவீனமான பந்து வீச்சு

(சிட்னி)

இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் களுக்கு அவுஸ்ரேலிய மைதானங்கள் சாதகமா இருந்தது இல்லை என்று அவுஸ்ரேலியாவின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் ரொட்னி ஹொக் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களிலும் இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர்கள் அவுஸ் ரேலியாவில் சோபிக்கத் தவறியுள்ளனர்.

தற்போதைய பந்து வீச்சாளர்களான நுவான் குலசேகர, சமிந்த ஹேரங்க மற்றும் சானக வெலகெதர ஆகியோர் தங்களுக்கு இடையில் இதுவரையில் 100இற்கும் குறைவான விக்கெட்டு களையே பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் தற்போதைய இலங்கை அணியின் பந்துவீச்சுக் குழா மால், அவுஸ்ரேலியாவில் பெரிதாக சாதிக்க முடியாது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கை அணி யின் துடுப்பாட்டம் சிறந்த நிலையில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## 12 மார்கழி 1986

இன்று தான் ஈ.பி.ஆர்.எல்.எப். புலிகளால் தடைசெய்யப்பட்டது. 1986 ஏப்ரலில் ரெலோ பின்னர் புளொட், என்எல்எப்ரி, பிஎல்எப்ரி என்று தடைசெய்தார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி, இடதுசாரிகள் தொழிற்சங்கங்கள் சுதந்திரமான ஸ்தாபனங்களின் செயற்பாடுகளை முடக்கினார்கள். தமிழ் பாசிசத்தின் ஒரு முக்கிய காலகட்டமே இது. வேறுபட்ட அபிப்பிராயங்களுடன் வெவ்வேறு கட்சிகளின் இருப்பு நிராகரிக்கப்பட்டது.

இது வெறுமனே வெவ்வேறு கட்சிகள் தலைவர்கள் என்பதனுடன் நிற்கவில்லை. சக சமூகங்கள், அண்டைநாட்டின் தலைவர் என விரிந்தது. இந்த "வரலாற்று விபரீதங்கள்" தான் பிரதானமாக தமிழர்களுக்கு எதுவுமே கிடைக்காமல் செய்தது.

வரலாற்றில் இழைக்கப்படும் பாரதூரமான தவறுகளுக்கு என்றோ ஒரு நாள் விலை செலுத்தவேண்டியே வரும். அது நிகழ்ந்தது. மாற்று கட்சியினரும், தலைவர்களும், சக சமூகங்களும், கவிஞர்கள் மனித உரிமைவாதிகள், முற்போக்காளர்கள் உடல்மீதியின்றி அழிக்கப்பட்டது மாத்திரமல்ல, தலைமறைவாகுவதற்கும், இடம்பெயர்வதற்கும் புலம் பெயர்வதற்கும் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

இன்று தலைமையில்லாத சமூகமாக ஊடகங்கள் இல்லாத பிரச்சார சாதனங்கள் (ஊதுகுழல்கள்) மிஞ்சிய சமூகமாக மாறியதன் பிரதான காரணம் இதுதான்.

சமூகம் பற்றிய எழிலார்ந்த கனவுகளுடன் புறப்பட்டவர்கள் மானிட விடியலைக் கனவு கண்டவர்கள் கேட்பாரின்றி தெருக்களிலும், வீடுகளிலும், சித்திரவதைக் கூடங்களிலும் கொல்லப்பட்டார்கள். வதை முகாம்களில் வாடினார்கள்.

பேரினவாதம் பற்றி என்ன குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதோ பல சந்தர்ப்பங்களில் அதையெல்லாம் விஞ்சியதாக புலிப்பாசிசத்தின் செயற்பாடுகள் அமைந்தன. வெவ்வேறு கருத்துக்கள் வெவ்வேறு இயக்கங்கள் இருக்கக்

# வரலாற்றில் கறை படிந்த நாட்கள்



கூடாது. மாற்றுகளுக்கான எந்த இடைவெளியும் இல்லை என்ற நிலை எமது சமூகவாழ்வை காட்டுமிராண்டி நிலைக்கு தள்ளியது.

ஆனால் இந்த சகோதரப்படுகொலைகள் ஒரு சமூகத்தின் அழிவில் பிரதான காரணிகளாக இருந்தன என்பதை இன்றைய அற எழுத்து விற்பன்னர்கள்(?) எவரும் மூச்சு கூட விடுவதில்லை. பாசிசத்தை நியாயப்படுத்துவதற்கு "எல்லாரும் தான் பிழைவிட்டவை" என குணாம்ச ரீதியாகவும் அளவு ரீதியாகவும் பெருநாசம் விளைவித்த ஒன்றுக்கு இவர்கள் நியாயம் சொல்வார்கள். ஏதோ ஒரு சில தவறுகள் நடந்தன தான் என சப்பை கட்டுவார்கள். அதுவும் சரி செய்யப்பட்டிருந்தால் எல்லாம் நேர்த்தியாக இருந்திருக்கும் என்பதுபோல் எழுதுவார்கள் - "நெஞ்சில் உரனும் இன்றி நேர்மை சிறிதும் இன்றி" - பாரதி.

இந்த சமூகத்தில் மாற்றதிற்காக நின்றவர்கள் பிரதானமாக தமிழ் பாசிசத்தால் அழிக்கப்பட்டார்கள் என்பதே உண்மை.

மீண்டும் மீண்டும் பாசிசத்தின் நிழலில் சமூகத்தை நிறுத்துவதற்கு முனைபவர்கள் இன்றும் இருந்துகொண்டு தான் இருக்கிறார்கள். பௌத்த சிங்கள மேலாண்மை வாத சக்திகளும் அதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வருகின்றன.

இராணுவ பிரசன்னமும், ஆத்திரமூட்டலும் ஒரு நெருக்கடியான நிலையை நோக்கி சமூகத்தை இட்டுச் செல்லும் போக்கு பரவலாக அப்பட்டமாக காணப்படுகிறது. இந்த சமூகத்தில் சிறந்தவை எல்லாவற்றையும், உன்னத மானவை எல்லாவற்றையும் அழித்ததில் தமிழ் பாசிசத்திற்கு பங்குண்டு என்பதை நாம் மனதில் இருத்தியாகவேண்டும்.

இன்று நிகழும் அநியாயங்களுக்கு மாற்றாக அது இருக்கமுடியாது. அது சட்டிக்குள் இருந்து நெருப்புக்குள் விழுந்த கதையாக இருக்கும். பேரழிவுகளுக்கும், தமிழ் சமூகம் எதையுமே பெற முடியாமல் போனதற்கும் தமிழ் போராட்டம் ஒரு சிதைவியக்கமாக மாறியதற்கும் இந்த தமிழ் பாசிசம் பங்களித்தது என்பதே யதார்த்தம்.

கடந்தகாலம் நிதானமாக பாரபட்சமின்றி ஆராயப்பட வேண்டும்.

சகோதரப்படுகொலைகளில் உடல்மீதியின்றி அழிக்கப்பட்டவர்கள் சமூகத்தில் மிகப் பெறுமதி வாய்ந்த மனிதர்கள். ஜனநாயக உணர்வு கொண்ட முற்போக்கான பிரிவு தேடித்தேடி அழிக்கப்பட்டது. இந்த மனிதர்களின் இழப்பு சமூகத்தில் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறதென்பதே உண்மை. இன்று இனப்பிரச்சினைக்கு தீர்வு, இராணுவமயமாக்கலுக்கெதிராக அகிம்சை வழியில் எதிர்ப்பியக்கம் நடத்துவதற்கு கூட ஆட்களை கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது.

எமது சமூகத்தில் நிலவும் பெரிய பிரச்சினை என்னவென்றால் உண்மையை பேசவோ உண்மையை கண்டறியவோ விருப்பமில்லாமல் இருப்பது. சிங்களபேரினவாதம் காலம் காலமாக தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளையெல்லாம் எவ்வாறு "பயங்கரவாதம்" என்ற ஒற்றைச் சொல்லால் மூடி மறைக்க முயலுகிறதோ "துரோகம்" என்ற ஒற்றைச் சொல்லினால் தமிழ் பாசிசம் தனது அநியாயங்களுக்கெல்லாம் நியாயம் சொன்னது, சொல்லிக் கொண்டிருக்கிறது.

மாற்று இயக்கங்கள் தவறிழைக்கவே இல்லை என்று கூறிவிடமுடியாது.

தவறுகள் இழைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அது பாசிசமாக இருக்கவில்லை.

முட்டிமோதலுடன் பேசுவதற்கான இடைவெளி இருந்திருந்தால் இயக்கங்கள்



உருப்படியாக சில காரியங்களை மக்கள் சார்பாக ஒப்பேற்றியிருக்க முடியும். பாசிசம் உலகில் வேறு இடங்களில் நிகழ்ந்ததைப்போலவே பாரிய சமூக அனர்த்தத்திற்கு வழி வகுத்தது. நாம் தனிப்பட்ட மனிதர்களை இங்கு குறிப்பிடவில்லை. ஒரு மனித குலவிரோத கருத்தியல் பற்றியே!!

இது 80 களுக்கு முன்னரே உருவாக்கப்பட்டது. அது சமூக ஜனநாயகத்திற்கும், முன்னோக்கிய இயக்கங்கள் மீதும் பாரிய அனர்த்தங்களை விளைவித்தது. உண்மையின் வெளிச்சத்தில் நாம் முன் செல்ல வேண்டும். பாசிசத்தை சமூகத்தினுள் உயிர்ப்பிக்கும் முயற்சிகள் சமூகத்தை மீண்டும் பேரழிவை நோக்கியே இட்டுச்செல்லும்.

சமூக நல்லெண்ணமும், அற உணர்வுகள் மேலோங்குவதற்குமான இடைவெளி அதிகரிக்க வேண்டும். சமூக ஜனநாயக சக்திகள் நெருக்கமாக இணைந்து செயற்படவேண்டும்.

**- சுகு சிறீதரன் கட்டுரையிலிருந்து.**




# எரிகற்கள்!

விண்ணில் இருந்து விண்கற்கள் அடிக்கடி பூமியை நோக்கி வந்தபடிதான் இருக்கின்றன. ஆனால் இவையெல்லாம் சிறுகற்களாக இருப்பதனால் இதனால் உண்டாகும் பாதிப்பிலிருந்து நாமெல்லாம் உயிர்தப்பிக் கொள்கிறோம். சூரியத் தொகுதியை எடுத்துக் கொண்டால் பூமியைப் போன்ற பெரிய கோள்கள் மாத்திரமன்றி விண்கற்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன. அதேசமயம் பூமியையும் ஏராளமான விண்கற்கள் சுற்றியபடி வருகின்றன. இவ்விண்கற்கள் தமது சுற்றுப்பாதையில் (ஒழுக்கு) இருந்து விலக புவியின் ஈர்ப்பு சக்திக்குள் வரும் போது புவியை நோக்கி வருகின்றன. புவியை நோக்கி வரும் போது விண்கற்கள் அசுரவேகம் பிடிக்கின்றன. அவற்றின் மீது வளி உராய்வதால் அவ்விண்கற்களின் வெப்பநிலையும் உச்சத்துக்குச் சென்று விடுகிறது. எமது வளிமண்டலத்தினுள் பிரவேசித்ததும் ஒட்சிசன் போன்ற தீப்பற்றத் துணைபுரியும் வாயுக்களின் உதவியினால் அவ்விண்கற்கள் எரிகின்றன. புவியை வந்தடையும் போது சாம்பலும் எஞ்சுவதில்லை. இதனால் விண்கல் ஆபத்திலிருந்து நாம் தப்பித்துக் கொள்கிறோம். இரவு நேரத்தில் ஆகாயத்தை அவதானிக்கும் போது, எப்போதாவது எதேச்சையாக இதனை அவதானிக்க முடியும்.

# ஒக்டோபஸ்

பிராணிகளில் பச்சோந்தி மட்டுமே நிறம் மாறும் தன்மை உடையது என்று நம்பினால் அது தவறான எண்ணமாகும். ஒக்டோபஸ் கடல் பிராணியாலும் தனது நிறத்தை மாற்றிக் கொள்ள முடியும். இந்தப் பிராணியின் கடினத் தோலில் பல வண்ணங்களைக் கொண்ட பைகள் உள்ளன. இந்த வண்ணங்களைத் தேவையான சமயங்களில் தனது நரம்புகளின் மூலம் உடலில் பல பகுதிகளுக்கும் அனுப்பி சிவப்பாகவோ நீல நிறமாகவோ, ஊதா, கபில வண்ணங்களிலோ அல்லது வரிக்குதிரைகளைப் போல் பட்டை பட்டையாகவோ தன் உடலை நிறம் மாற்றிக் கொள்கிறது இந்த உயிரினம்.






# அப்படியா?

- கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை 1843ஆம் ஆண்டு லண்டன் மாநகரில் அறிமுகமானது.
- மாலைதீவிலுள்ள மொத்த பெண்களில் 54 சதவீதம் பேர் வேலைக்குச் செல்பவர்களாக இருக்கிறார்கள்.
- சுக்கிரன் கிரகத்தில் எப்போதும் புயல் வீசிக் கொண்டே இருக்கும்.
- 2 கோடியே 40 இலட்சம் ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் ஒரே வால் நட்சத்திரம்: டெல்வியான் வால்நட்சத்திரம் 1914.
- உலகிலேயே அதிகமாகப் பயிரிடப்படும் காய் வெங்காயம்.
- மனித முகத்தின் இரு பக்கங்களும் ஒரே மாதிரியாக இருக்காது. ஒரு கண் மற்றதைவிட பலமாக இருக்கும். அதே போல சாதாரணமாக வலது காது, இடதுகாதை விட சற்று உயரமாக இருக்குமாம் கன்னமும் அப்படித்தான் தலைமுடியின் வளர்ச்சியும் அப்படியே! ஆச்சரியமாய் இல்லை!

# ரோடைத் தெரியும்; ஆளைத் தெரியாது!



தொடக்ககாலத் திரையுலக ஜாம்பவானாய் இருந்தவர் மன்னார்குடி எம்.ஜி.நடராஜப்பிள்ளை. அப்போது அவர் எடுத்துக் கொண்டிருந்த திரைப்படம் “தட்சயக்கியம்”. இந்தப் படத்தில் “தட்சன்” பாத்திரத்தில் நடராஜப்பிள்ளையே நடித்துக் கொண்டிருந்தார். திரையுலகில் அடியெடுத்து வைக்க எம்.ஜி.ஆர். போராடிக் கொண்டிருந்த நேரம். அதற்கு முன் மூன்று, நான்கு படங்களில் சிறு வேடங்களில் எம்.ஜி.ஆர். நடித்திருந்தார்.

“தட்சயக்கியம்” படத்தில் வலுவான பாத்திரத்தில் நடிக்க வாய்ப்புத் தேடி எம்.ஜி.நடராஜப் பிள்ளையைச் சந்திக்க எம்.ஜி.ஆர், இயக்குநர் ராஜா சாண்டோ இருவரும் மன்னார்குடிக்கு வந்திருந்தனர்.

“தட்சயக்கியம்” திரைப்படத்தின் ஒத்திகை உள்ளிக்கோட்டை தியாகி சோமசுந்தரத் தேவருக்குச் சொந்தமான சத்திரத்தில்தான் நடந்தது. சூட்டிங் முழுவதும் சென்னையில் ஸ்ரூடியோவில் நடந்தது. சோமசுந்தரத் தேவர் சிபாரிசில் எம்.ஜி.ஆருக்கு “தட்சயக்கியம்” படத்தில் பரமசிவன் வேடம் கிடைத்தது.

ஒரு நாள் சூட்டிங்கில் கைலாயத்தில் பரமசிவனாக எம்.ஜி.ஆர். அமர்ந்திருக்கிறார். தட்சனாக எம்.ஜி. நடராஜப்பிள்ளை. கைலாயக் காட்சி. மார்கழி மாதத்தில் கடுமையான பனி பெய்யும் நாளில் எடுக்கப்பட்டது. நடராஜப்பிள்ளைக்கு ஆஸ்மா வியாதி உண்டு. பனி ஒத்துக்கொள்ளாமல் மூச்சுத் திணறல் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் நடராஜப்பிள்ளை. எம்.ஜி.ஆர். அவரைப் பார்க்கப் போயிருந்தார். டாக்டர்கள் நடராஜப்பிள்ளையிடம் கொஞ்சம் மது அருந்தினால் மூச்சுத் திணறல் குறையும் எனக் கூறுகின்றனர். அதனை அவர் ஏற்க மறுத்துவிட்டார். “ஐயா! மருந்தாகத்தானே உட்கொள்ள வேண்டும். ஏன் அதனை மதுவாக நினைக்கிறீர்கள்” என்று எம்.ஜி.ஆர். நடராஜப்பிள்ளையிடம் கேட்டார்.

“ராமச்சந்திரா! மருந்தே ஆனாலும் மதுவென்றால் உட்கொள்ள மாட்டான் இந்த காந்திய வழியில் வாழும் கதர்ச்சட்டை நடராஜப்பிள்ளை” என்று கூறியதோடு, “ராமச்சந்திரா... நீயும் உன் வாழ்நாளில் மது அருந்தக்கூடாது. புகைப்பிடிக்கக் கூடாது. இது என்மேல் ஆணை!” என்றார் நடராஜப்பிள்ளை!

அதுதான் எம்.ஜி.ஆருக்கு வேதவாக்காயிற்று. மது, புகை இவ்விரண்டிற்கும் ஆட்படுவதில்லை என முடிவெடுத்தார். இந்த நடராஜப்பிள்ளையின் பெயர்தான் மன்னார்குடியில் உள்ள தஞ்சாவூர் பிரதான வீதிக்குப் பின்னாளில் வைக்கப்பட்டது. இன்று மன்னார்குடியில் நடராஜப்பிள்ளை ரோட் பலருக்கும் தெரியும். ஆனால் நடராஜப்பிள்ளையைத்தான் எவருக்கும் தெரியவில்லை!

(‘வாழ்க்கைத்தடம்’ நூலில் முனைவர் நா.தனசேகரன்)

# அபிராமியின் காதலன்

யாழ்ப்பாண தமிழ் அரசர்களின் முந்தையகால அரசாட்சி வரலாறுகள் பலதையும் இன்றைய நாளில் அறிந்து கொள்ள முடியாத நிலையில், அதற்குரிய சான்றுகள் மழுங்கடிக்கப்பட்டு மறைக்கப்பட்டுப் போன சூழலில், யாழ்ப்பாண இராச்சியத்தில் நிகழ்ந்ததான சில தரவுகளை வைத்துக்கொண்டு, தனது கற்பனைத் திறனூடாக அபிராமியின் காதலன் எனும் குறுநாவல் ஒன்றைப் படைத்துள்ளார் நீர்வை தி.மயூரகிரி அவர்கள்.

இருபத்து மூன்று வயதான இந்நாவலின் ஆசிரியர் தனது சிற்றனுபவ அறிவோடு எழுதப்பட்டதாகக் கூறும்போது, இவரது எழுத்தாக்க முயற்சி பாராட்டப்பட வேண்டியதொரு விடயம்.

அதிகம் அறியப்படாத ஒரு காலத்தையும் வம்சத்தையும் நிலைக்களனாகக்கொண்டு, கதையை நகர்த்திய துணிபு ஒரு புறமிருக்க, மொழிநடையின் இறுக்கத்தை இன்னும் கொஞ்சம் இலகுபடுத்தியிருப்பின் “காதல்” இன்னும் மெருகேறியிருக்கும் என்றுபடுகிறது. சில இடங்களில் வரலாற்றை விளங்கிக் கொள்ள முடியாமல் வாசகன் தவிப்பது இந்த நடையின் இறுக்கம் காரணமாக இருக்கலாம்.

யாழ். குடாநாட்டினுள் அடங்கும் பல கிராமங்களின் பெயர்களினூடாக நகரும் இந்த அரச கதை, காதல் தோல்விக்குள்ளாகும் இரு நண்பர்களின் வாழ்க்கையையும் முடிவில் ஒருவர் வாழ்வு வெறுத்து சந்நியாசியாகிப்போக, அபிராமியும் அவளது கணவனும் ஒன்று சேருவதோடு கதை முடிவு பெறுகிறது.

வழமையான பாணியில் இருந்து விடுபட்டு, வித்தியாசமாக, முக்கியமாக என்னை ஒத்த இளைஞர்களைச் சென்றடைய வேண்டும் என்பதே விருப்பம்... என தன்னுரையில் தெரிவிக்கும் நூலின் ஆசிரியர், போர்ப்படை எனும் சொல் வரவேண்டிய இடத்தில் “இராணுவம்” என்றும், தாவணி என்பதற்குப் பதிலாக “முந்தானை” எனப் பாவிப்பதும், சொற்கள் கதைக்குரிய காலத்துக்கு முரணாகப்படுவதாகவே தோன்றுகிறது.

மேலும் சில இடங்களில் எழுத்துப் பிழைகள்



தென்படுவதோடு, வசன முடிவுகளில் முற்றுப்புள்ளிகள் அற்று இருப்பது, வாசிக்கும்போது சற்று நெருடவே செய்கின்றது. ஆசிரியரின் இம்முயற்சியைத் தமிழக சரித்திர நாவல்களோடு ஒப்புநோக்குமிடத்து, இது ஒரு சிறுபுள்ளியாயினும், இப்புள்ளி மேலும் விரிவடைய தேடலும், வாசிப்பும் முயற்சியும், உசாத்துணைகளும் ஆசிரியருக்கு இன்றியமையாததொன்று என்பது வெளிப்படை.

| | |
|---|---|
| நூலின்பெயர் | : அபிராமியின் காதலன் |
| நூலாசிரியர் | : நீர்வை. தி.மயூரகிரி |
| விலை | : 200 ரூபா |

---

இலவசம் என்றதும் வாயைப் பிளக்காதார் எம்மில் யாரும் இல்லை. நாம் எல்லோருமே இலவசத்தின் அடிமைகள். 03 சாறம் வாங்கினால் 01 இனாம், 04 சோப் வாங்கினால் 01 ஷம்பூ இனாம், 01 T.V வாங்கினால் 01 DVD Player இனாம். ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கினால் 01 ஹெல்மெட் இனாம், 01 ஓட்டோ வாங்கினால் 01 பக்கத்திரை இனாம்.... இவ்வாறு பல இலவசங்கள் எம்மைக் கவருகின்றன.

இலவசத்திற்குப் பின்னால் இருக்கும் பயனைப்பற்றி நாம் சிந்திப்பது இல்லை. இலவசம் என்றதும் முண்டியடிப்போம். வங்கிகளில் இவ்வளவு சேமிப்பில் பணம் போட்டால் இவ்வளவு பொருட்கள் இனாம் என்று போடுவார்கள். ஆனால் யாரும் அந்த சேமிப்பின் வட்டி வீதத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

எவ்வளவோ இலவசங்கள் வீட்டில் பாவனையின்றி தேவைப்படாத குப்பைகளாகி இருக்கின்றன. நமது வீட்டிலும் ஒரு அடுப்பு காஸ் குக்கர் ஒன்று பாவனையின்றி நீண்டகாலம் பெட்டிக்குள் உறங்குகின்றது. நல்ல வேளையாக ஆட்களுக்கு இவ்வளவு இனாம் என்று இன்னும் வளரவில்லை நாம். இல்லாவிட்டால் ஒரு மனைவிக்கு ஒன்று இனாம், ஒரு மாப்பிள்ளைக்கு இன்னொரு மாப்பிள்ளை இனாம் என்ற மாதிரியாக பேரம் பேசல்கள் அமைந்து விடும்.

ஒவ்வொரு நிறுவனமும் தமது வியாபாரங்களை மேம்படுத்த இவ்வாறான உத்திகளைக் கையாளுகின்றன. யாரும் இலாபம் இல்லாமல் இலவசங்களைத் தருவதில்லை.

இலவசத்துக்கு உதாரணமாக ஒரு பிரெஞ்ச் கதையைச் சொல்லலாம்.

அந்த நாட்டில் ஒரு இராணுவ முகாம் இருந்தது. அதற்கருகில் ஆடம்பர பங்களா ஒன்று இருந்தது. அதில் வர்ணிக்க முடியாத அழகினை உடைய ஒரு விலைமாது இருந்தார். அவளது பெறுமதி மிகவும் விலை கூடியதாக இருந்தது.

பிரபுக்களும், செல்வந்தர்களும் மட்டுமே அவளது வாசற்கதவை தட்ட முடிந்தது. இராணுவ முகாமிற்குள் இவளைப் பற்றியே பேச்சு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக




அவளது அங்கலாவண்யங்களை வர்ணிப்பார்கள். தமது அறைகளில் அவளது புகைப்படங்களை ஒட்டியிருந்தார்கள். ஆனால் எல்லோருக்கும் பெருமூச்சு. அவள் அவர்களால் அடைய முடியாத எட்டத்தில் இருந்தாள். அவர்களது சில ஆண்டு வேதனங்களைச் சேமித்தால் கூட அடைவது சிரமம் தான்.

ஒரு நாள் எல்லா இராணுவ வீரர்களும் ஒன்றுகூடி இது தொடர்பாக கலந்துரையாடினார்கள். எல்லாரும் அவளை நினைத்து உருகுவதைவிட எம்மில் யாராவது ஒருவர் அவளை அடைய ஏனையோர் அவருக்கு உதவலாமே என்று யோசனை முன்வைக்கப்பட்டது. அந்த அதிர்ஷ்டசாலியின் அனுபவத்தை பிறகு எல்லாரும் கேட்டு ஆறுதலடைவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி அங்கிருந்த எல்லா இராணுவ வீரர்களும் 100 பிராங்க் படி போடுவதென்றும் பின்னர் அவர்களது பெயர்கள் எல்லாம் ஒரு சீட்டில் எழுதப்பட்டு அவற்றைக் குலுக்கி ஒருவரைத் தெரிவது என்றும் முடிவாயிற்று.

அங்கிருந்த ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்களிடம் இருந்தும் பெரும் நிதி வசூலாயிற்று. குறித்த நாளில் எல்லோரது பெயர்களும் எழுதப்பட்ட சீட்டுக்கள் கொண்ட பெரிய பரலைக் குலுக்கி ஒன்றைத் தெரிவு செய்தார்கள்.

அதிர்ஷ்டம் அடித்தது ஒரு சாதாரண இராணுவ சிப்பாய்க்கு. அவன் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே இல்லை. மற்றெல்லாரும் பொறாமை பெருமூச்சு விட்டார்கள். ஒரே நாளில் அந்த இராணுவ முகாமில் அந்த அதிர்ஷ்டசாலி சிப்பாய் பெரும் பிரபலமடைந்தான்.

குறித்த நாளும் வந்தது. அவன் தனது விலையுயர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டான். புது பூட்ஸ்களுடன் அவளைச் சந்திக்க தயாரானான். மிகவும் மகத்தான நாள் இன்று என்று தனது நாட்குறிப்பில் எழுதிக் கொண்டான்.

சேகரித்த நிதியை முடிப்பாக கட்டி எடுத்துச் சென்றான். பங்களாவில் அவள் அவனை வரவேற்றாள். பணத்தை எண்ணி வாங்கிக் கொண்டாள். அவளது அருகாமை அவனுக்கு புல்லரித்தது. எவ்வளவு விலையுயர்ந்த பெண் அவளைப்பற்றிக் கேள்விப்பட்டதெல்லாம் பொய்யல்ல என்று தெரிந்து கொண்டான். அவளது கொஞ்சும் மொழி அவனைக் கிறங்கடித்தது. அவளுக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தான்.

அவளது பார்வை சுண்டி இழுத்தது. அங்கங்க்ள் அனைத்தும் கச்சிதமாக இருந்தன. அவளுடன் அந்த இராத்திரி அவனுக்கு இன்பமாகக் கழிந்தது. காலையில் இவ்வளவு பெரிய நிதியை ஒரு சாதாரண சிப்பாயான உன்னால் எவ்வாறு பெற முடிந்தது என்று கேட்டாள். அவனும் சிரித்துக்கொண்டே பக்கத்து முகாமில் நடந்த விபரத்தைச் சொன்னான்.

அவள் மிகவும் ஆச்சரியப்பட்டாள். தனக்காக இவ்வளவு பேர் உருகுகிறார்களா என எண்ணி கர்வப்பட்டாள். அந்த இராணுவச் சிப்பாயின் மேல் பரிதாபப்பட்டாள். அவனுடன் முந்தைய இரவு இலவசமாகவே கழிந்ததாக இருக்கட்டும் என எண்ணினாள்.

எனவே அந்த இராணுவ வீரனுக்குச் சொன்னாள் நீ என்னுடன் இலவசமாகவே இருந்ததாக இருக்கட்டும். உன் அப்பாவித்தனம் என்னைக் கவர்ந்தது இந்தா உன் பணத்தை நீயே வைத்துக்கொள் என்று அவன் பங்களித்த 100 பிராங்கை மட்டும் அவனிடம் நீட்டினாள்....!





# இன்றைய சிறாரை
# விடுமுறையைக் கொண்டாட வகை செய்வோம்

நாம் சிறுவராக இருந்த காலத்தில் இற்றைக்கு 20 வருடத்தின் முன் ஆண்டிறுதி விடுமுறை யென்றால் எம்போன்ற சிறாருக்குக் கொண்டாட்டம் தான். ஒவ்வொரு விடுமுறைக்கும் ஒவ்வொரு ஊரில் உள்ள உறவினர் வீட்டுக்குச் செல்வதும் அங்கு எம்மை ஒத்த வயதினரோடு மகிழ்ச்சிகரமாகச் சுற்றுவதும் இயற்கையை இரசிப்பதும், பல்வேறு விளையாட்டுக்களிலும் ஈடுபடுவதும் வழக்கமாகும். ஆனால் இது இன்று மலையேறிப்போன கதையாக மாறிவிட்டது.

இன்று பூட்டிய வீட்டிற்குள் கணனி முன்பும், தொலைக்காட்சிப் பெட்டியின் முன்பும் பிள்ளைகள் விடுமுறையைக் கழிக்கும் பரிதாப நிலையைக் காண முடிகிறது. துடிப்பான இச் சிறு பராயம் வீணாக கழிவது கவலை தருவதாகும்.

**பிள்ளைகளை விளையாட விடுவோம்**

நாம் சிறுவராக இருந்த காலத்தில் இருந்த விளையாட் டுக்கள் இன்று வழக்கொழிந்து வருகின்றன. இன்றைய நவீன வசதி படைத்த காலத்தில் கூட்டுக்குடும்ப உறவு சிதைவடைந்தமை, நேர வளப் பஞ்சம், போதிய இடமின்மை, அவசர வாழ்க்கை முறைமை, தொலைக்காட்சிப் பெட்டிகளின் ஆதிக்கம் போன்ற காரணங்களால் இன்றைய சிறார்கள் வெளிப்புற விளையாட்டுக்களில் ஈடுபடமுடியாத துர்ப்பாக்கிய நிலையுண்டு. அன்று நாம் விளையாடிய எட்டுக்கோடு, கள்ளன் பொலிஸ், பிள்ளையார் பந்து, ஒப்பு, கொய், ஆடு புலி, சடுகுடு, கிட்டிப்புள்ளு, மாபிள் விளையாட்டு, கிளித்தட்டு போன்றன மூலம் பல்வேறு பயிற்சிகளும் மறைமுகமாக எமக்கு கிடைத்தன. நரம்புகளை வலுவூட்டும் பயிற்சி, கவனம் தொடர்பான பயிற்சி, மூச்சுப் பயிற்சி, விழிப்புணர்வுடன் இருத்தல் தொடர்பான பயிற்சி, பல்வேறு உடலமைப்புகளையும் வலுவூட்டும் பயிற்சி போன்றன கிடைத்தன.

இது தவிர இவ்வாறான விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் மூலம் வெற்றி தோல்விகளை ஏறகும் மனோநிலை, விட்டுக்கொடுக்கும் இயலபு, ஒற்றுமை, பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறன் போன்றனவும் கைவரப்பெற்றன.

வகுப்பறைக் கற்றல் மூலம் அடைய முடியாத பல்வேறு அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி போன்றவற்றை விளையாட்டின் மூலம் ஈட்டிக் கொள்ள முடியும். எனவே குறைந்தது விடுமுறை காலத்திலாவது சிறுவரை விளையாட விடுவோம.

**விடுமுறையைக் கொண்டாட விடுவோம்**

ஒவ்வொரு பிள்ளையும் காலை எழுந்ததும் காலைக்கடனை அவசரமாக முடித்துக்கொண்டு பாடசாலை, பின் மாலையில் தனியார் கல்வி நிலையப் படிப்பு, இரவில் பாடசாலையினதும், தனியார் கல்வி நிலையத்தினதும் வீட்டு வேலை என நிம்மதியின்றி படிப்புச் சக்கரத்தில் சுழன்று கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு ஓய்வு தேவையல்லவா?

இரண்டரை மணிநேரம் ஓடும் சாதாரண சினிமாப் படத்திற்குக்கூட கால்மணி நேர ஓய்வு கொடுக்கும் போது காலம் முழுவதும் படிப்புச் சக்கரத்தில் சுழன்று கொண்டிருக்கும் பிள்ளைக்கு ஓய்வு தேவையில்லையா?

இன்றைய சிறுவர்கள் தொழிற்சாலை இயந்திரம் போலல்லவா இயங்குகிறார்கள்! இயந்திரங்களைக் கூட பழுதுபார்க்க ஓய்வு கொடுக்கிறார்கள். ஆனால் இந்தக் காலத்தில் பிள்ளைகளை பாடசாலை நீரோட்டத்தில் பிரகாசிக்கச் செய்வதற்கும், அதிக புள்ளிகள் பெறவும் விடுமுறை நாட்களிலும் அவர்களின் கல்வியோட்டத்தை முடுக்கி விடுகிறார்கள்.

இதனால் அவர்களுக்கு கல்வி மீது அதிக வெறுப்பு ஏற்படவே வகை செய்யும். பிள்ளைகளை விடுமுறை கால ஓய்வின் பின் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுத்துவது அவர்தம் கற்றலில் விரக்தி நிலையை ஏற்படுத்தும் (இங்கு ஓய்வென்றது எதுவித கற்றலுமின்றி இருப்பதன்று மறைமுக கற்றலில் ஈடுபடல் வேண்டும்).

**விடுறையில் பயனுள்ள் செயற்பாடுகள்**

**1) உறவினர் வீடுகளுக்கான தரிசிப்பு**

விடுமுறைக் காலத்தில் தூர உள்ள உறவினர் வீடுகளுக்கும், அயல் ஊர்களில் உள்ள உறவினர் வீடுகளுக்கும் சென்று எம் உறவுகளை வலுப்படுத்



திக் கொள்வதுடன், பிள்ளைகளின் ஆளுமையை பண்பு களை வளர்த்துக் கொள்வதற்கும் இது தீனிபோடுவதாக அமையும்.

**2) சுற்றுலா ஒன்றை ஒழுங்கு செய்யலாம்.**

உறவினர்கள், நண்பர்கள் சேர்ந்து சுற்றுலா ஒன்றை ஒழுங்குசெய்து பிள்ளைகளை சந்தோசத்தில் ஆழ்த்துவதோடு, அவர்களுக்கு புது அனுபவங்கள் கிடைக்கவும் வகை செய்யலாம்.

**3) நூல்களை அறிமுகப்படுத்தலாம்**

கிடைக்கும் ஓய்வில் நூல்களை பிள்ளை நுகரச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் சிறப்பானது. வயதுக்கேற்ற நூல்களை வாங்கிக் கொடுக்கலாம். அல்லது நூலகம் சென்று நூல்களை வாசிக்கவோ, அல்லது இரவல் வாங்கவோ வகை செய்யலாம். ஒரு பிள்ளையின் சகல திறமைகளையும் வளப்படுத்த நூல்களே சிறந்த கருவிகளாகும்.

**4) சுயமாக வேலை செய்யும் திறனை வளர்த்தல**

பிள்ளையின் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யும் வேலைகளுக்கு பழக்கங்களை ஏற்படுத்திக் கொடுக்கலாம். தனது உடைகளைத் தானே துவைக்க, தனது பாதணிக்கு தானே பொலிஸ் இட, தானே தனது மேசையை அலங்கரித்தல் போன்ற செயற்பாடுகளில் பிள்ளையை ஈடுபடுத்திக்கொள்ளலாம். இது பிற்காலத்தில் பல்வேறு செயற் பாடுகளையும் தானே செய்து முடிக்க அத்திவாரமாக உதவும்.

**5) வீட்டுத் தோட்டச் செய்கை மீது ஆர்வத்தை ஏற்படுத்தல்**

தனக்கு வேண்டிய உணவின் ஒரு பகுதியை உற்பத்தி செய்யும் வீட்டுத் தோட்டச் செய்கை மீது ஆர்வத்தை ஏற்படுத்த ஏற்ற காலம் இதுவாகும். அனேக தாவரங்கள் நடுகை செய்வதற்கு ஏற்ற காலமும் இதுவே ஆகும. எனவே ஆண்டிறுதி விடுமுறைகளில் பல்வேறு நாற்றுக்கள், விதைகள் போன்றவற்றை நாட்டிப் பிள்ளை யின் இயற்கை மீதான கரிசனையையும், தனது சுய முயற்சி மூலம் வீட்டுப் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யும் மனப்பாங்கையும் வளர்த்துக் கொள்ளலாம்.

பாடங்களில் சுமைகளால் களைப்படைந்து நிற்கும் மாணவர்களுக்கு சுகமான சுமையாக அமையுமாறு ஆண்டிறுதி விடுமுறைகளைக் களிக்க வகை செய்வது அவர்களின் தொடர்ந்த முன்னேற்றத்திற்கு ஊன்று கோலாக அமையுமென்பதில் ஐயமில்லை.

அ.நிரூபா (ஆசிரியர்)
உரும்பிராய்.

# திருவாவடுதுறை ஆதீன சீர்வளர்சீர் சிவப்பிரகாச ஒலி மௌனமானது



“ஞானநூல் தனை ஓதல், ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல், நன்றா ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல், ஐந்தும் இறைவனடி அடைவிக்கும் எழில் ஞானபூசை” நித்தமும் ஏற்றி மன மகிழ்வுடன் திருவருளே துணையென திருவாவடுதுறை ஆதீன இருபத்தி மூன்றாவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசார்ய சுவாமிகள் இவ்வையகத்தில் வாழ்ந்து 23.11.2012 இல் இறைவன் கழல் பற்றி மௌனமானார். அன்றே சமாதியில் நிறைவெய்தப் பெற்றார்.

திருக்கையால பரம்பரை மெய்கண்ட சந்தானம் 14 ஆம் நூற்றாண்டில் திருநாகைக்காறோண மாவட்டத்தில் திருவாவடுதுறை ஆதீனம் தோற்றம் பெற்றது. அன்று முதல் பல அருட்கொடைகள் ஞான தானம், அன்னதானம் போன்றவற்றை ஆற்றி வந்துள்ளது.

உலகில் எங்கே சைவச் சான்றோர்களாக திகழ்கின்றார்களோ அவர்களைத் தேடி சமூகம், சமயம், அரசியல் வேறுபாடுகளை கருத்தில் கொள்ளாது சமயம், மொழி, கலை, இலக்கியத்துறைகளில் சிறந்தவர்களை கண்டறிந்து ஆதீனத்துக்கு அழைத்து பாராட்டி பரிசு, விருது, பதவி வழங்கி கௌரவிப்பதை நீண்ட காலமாகவே நடைமுறைப் படுத்தி வருகின்ற சிறப்பு திருவாவடுதுறை ஆதீனத்துக்கு.

மாணவர்களை நற்சான்றோர்கள் ஆக்கவும் கல்வி என்ற ஆயுதமே சாலச்சிறந்தது என கண்ட யாழ்ப்பாணத்து நல்லூர் கந்தப்பிள்ளை ஆறுமுகம் அவர்கள் வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தார். அதைத்தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் ஆரம்பமாகின. மாணவர்களுக்குத் தேவையான தரமான பாட நூல்களை தானாகவே எழுதியும், அச்சு பதிப்பிக்க விரும்பி அச்சியந்திரம் வாங்குவதற்கு தமிழ் நாட்டுக்குச் சென்று, திருவாவடுதுறை ஆதீனம் அடைந்தார்.

திருவாவடுதுறை ஆதீன கர்த்தா 14 ஆவது குருமகா சந்நிதானம் சுவாமிகளைத் தரிசனம் செய்து வணங்கி தன் நூலாக்கப் பணிக்காக ஆதீன சரஸ்வதி மகாலில் உள்ள ஓலைச் சுவடிகளை ஆய்வு செய்ய விரும்பி அங்கே சென்றார். ஆதீன சந்நிதானத்துடனும் அங்கிருந்த ஏனைய அறிஞர் பெருமக்களுடனும் ஆறுமுகப்பிள்ளை செய்த சமய கலந்துரையாடல் களிலிருந்தும், தர்க்க ரீதியான தெளிவான சொற்பொழிவுகளிலிருந்தும் அவருடைய ஆழமான சமய அறிவையும், பேச்சாற்றலையும் கண்டு வியந்த சுவாமிகள் நல்லைநகர் தந்த பெருமகனுக்கு நாவலர் என்ற சிறப்பு விருதினை வழங்கி கௌரவித்தார்கள்.

அண்மையில் சமாதியடைந்த இருபத்து மூன்றாவது குருமா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் உலக நலன் வேண்டி யாகங்கள் பல வளர்த்து கருணை இல்லங்கள் சிறுவர்களைப் பாதுகாத்து புத்தாடை, அருட்கொடை வழங்கி ஊக்குவித்தும் ஆலயங்களில் பூசைகள் சரியாக நடைபெறவும், பாடல் பெற்ற ஸ்தலங்கள் ஆலயங்கள் புனரமைப்புச் செய்து வைத்து நித்திய நைமித்தியங்கள் ஒழுங்குற நடைபெற வழிவகை செய்தும் பல்லாயிர ஓலைச்சுவடிகளை நூல் வடிவாக்கவும், பெரிதும் உதவியுள்ளார்கள். தமிழகத்தில் சைவத்திருமுறை வளர்க்கும் நோக்கில் பன்னிருதிருமுறைப் பயிற்சி மையம் அடுத்து கொழும்பிலும், சைவ சித்தாந்த பயிற்சி வகுப்பும் பன்னிரு திருமுறைப் பயிற்சி மையமும் அமைத்து நமது ஈழத் திருநாட்டிற்கு பல சேவைகள் புரிந்து வருகின்றது திருவாவடுதுறை ஆதீனம்.

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரியார் சுவாமிகள் மூன்று முறை இலங்கை வந்துள்ளார்.

சி.கிருஷ்ணமூர்த்தி (அமைப்பாளர்)
அகில இலங்கைத் திருமுறை மன்றம் - யாழ்ப்பாணம்.

# விரைவான மக்கள் மீள்குடியேற்றத்திற்கு கண்ணிவெடியகற்றும் பணியே காரணம்

(கிளிநொச்சி)



யுத்தத்திற்கு பின்னர் எமது பிரதேசங்களில் வெற்றிகரமான மீள்குடியேற்றம் சாத்தியமாக்கப்பட்டுள்ளது என்றால் அதற்கு கண்ணிவெடி அகற்றும் பணியே காரணம் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற 'உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தில் ஜெயபுரம் பகுதியில் கண்ணிவெடி அகற்றப்பட்ட தேவன்குளம் மற்றும் இத்தாவில் பண்ணை பிரதேசங்களை மக்களின் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்ணிவெடி அகற்றும் பணி ஒரு மகத்தான பணி எமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக கடிமான பணியினை மேற்கொண்டுவரும் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் செயற்பாடுகளை நாம் அனைவரும் பாராட்ட வேண்டும். குறிப்பாக டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் இதுவரை காலமும் எவ்வித விபத்துகளும் இன்றி தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமை சிறப்பான விடயமாகும். இவர்களின் இந்த மகத்தான பணியினை நான் நாடாளுமன்றத்திலும் குறிப்பிட்டு பேசியிருக்கிறேன். அந்தளவுக்கு கண்ணிவெடி அகற்றும் பணியின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது.

கண்ணிவெடி அகற்றும் பணிக்கான நிதி ஒதுக்கீடுகள் பூர்த்தியாகவுள்ள நிலையிருந்தாலும் ஜெயபுரம் பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றப்படாமல் உள்ள பிரதேசங்களின் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கும் எம்மால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழி சமைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் செயற்பாட்டு அதிகாரி பொன்சேகா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன், டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் இலங்கைகான அதிகாரி மற்றி நிக்களஸ், யுஎன்டிபி நிறுவனத்தின் பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அதிகாரி முருகதாஸ் மற்றும் இராணுவ அதிகாரி, பொலிஸ் அதிகாரி, கிராம அலுவலர், பொதுமக்கள், டெனிஸ் கண்ணி வெடி அகற்றும் நிறுவன பணியாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# சேதமடைந்துள்ள பாலத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

அல்வாய் - நாவலடிப்பகுதியில் உடைந்த நிலையில் காணப்படும் பாலத்தினால் கனரக வாகனங்களின் போக்குவரத்துக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் மற்றும் சாரதிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.


பருத்தித்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான அல்வாய் முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு செல்லும் இவ்வீதிக்கு குறுக்கே உள்ள வெள்ளவாய்க்கால் பாலம் பல ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாமையினால், சிறிய பாதிப்புக்குள்ளாகியிருந்தது. கடந்த மாதம் யாழ்ப்பாணத்திலிருந்து அல்வாய் பகுதிக்கு உரம் ஏற்றிவந்தலொறி இப்பாலமூடாக வந்து கொண்டிருந்த வேளை பாலம் உடைந்த சில்லு அதற்குள் சிக்குண்டு குடைசாய்ந்த போதிலும் அதில் பயணித்த சாரதி நடத்துனர்கள் தெய்வாதீனமாக உயர்தப்பிக்கொண்டனர்.

இருந்தும் பிறிதொரு கனரக வாகனம் கொண்டு இழுத்து எடுக்க கஷ்டப்பட்டதுடன் வாகனத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த வீதிப் பாலம் உடைந்ததையிட்டு திருத்த வேலைகளுக்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதுடன், கனரக வாகனங்கள் தவிர்ந்த ஏனைய சிறியரக வாகனங்கள் (உந்துருளி)ஓரளவு பயணிக்க முடிகின்றது. அதுவும் இரவு நேரத்தில் அப்பாலமூடாக பயணிக்க அஞ்சுவதுடன் விபத்துக்களும் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது. தற்போது இப்பாலத்துக்கு பாதுகாப்பு வேலிகள் போடப்பட்டு அவ்விடத்தில் மாத்திரம் 'பாலம் உடைந்துள்ளது கவனம்' என்று பெயர்ப்பலகை போடப்பட்டுள்ளது.

குறித்த வீதிப் பாலமூடாக வடக்குப் பக்கம் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் வரும் கனரக வாகனங்களும் தெற்குப் பக்கமாக இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலிருந்து அறியாமையினால் வரும் கனரக வானங்களும் உடைந்த நிலையில் உள்ள பாலத்தின் ஊடாக பயணிக்க முடியாமல் திரும்பிச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப்பாலம் போன்று பொலிகண்டி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள வெள்ளை வாய்க்கால் பாலத்தின் மேல் பாதுகாப்புக்காக கட்டப்பட்டிருக்கும் சீமெந்து கட்டுகள் உடைந்த நிலையில் காணப்படுகின்றது. எனவே மிகவும் சேதமடைந்துள்ள பாலம் மற்றும் வெள்ள வாய்க்கால்களை சீர்செய்து போக்குவரத்தை இலகுபடுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்கு வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.(116)





ஜனாதிபதியின் பிறந்ததினம் மற்று பதவியேற்பு தினத்தை முன்னிட்டு வல்வெட்டித்துறை சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் அண்மையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கான சுயதொழில் வாழ்வாதார கருத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இதில் வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க்கட்சி உறுப்பினர் திருமதி இந்திரன் கயிலாஜினி பயனாளி ஒருவருக்கு காசோலை வழங்குவதையும், மரம் நாட்டும் நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் பிரதேச உறுப்பினர் கே.விசிந்தன் மரம் நாட்டுவதையும் காணலாம். (116)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

கொழும்பு - 13 computer shop இற்கு பகுதி நேரத்திற்கு வேலையாட்கள் தேவை. (கொழும்பில் படிப்பவர்கள் விரும்பத்தக்கது.) தொடர்புகளுக்கு: 077 786 2321.

---

யாழ்.நகரில் இயங்கும் சில்லறைக்கடையொன்றுக்கு வேலையாட்கள் (ஆண்கள்) தேவை. தொடர்புகளுக்கு: 077 230 6390, 077 189 9685.

---

வல்வெட்டித்துறையில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள Pharmacy ஒன்றிற்கு pharmacy certificate உடைய ஒருவர் தேவை. இருபாலாரும் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: 077 786 5520.

---

இயக்கச்சியில் அமைந்துள்ள பூச்செடி விற்பனை நிலையத்திற்கு கடின உழைப்பை விரும்பும் பெண்கள் தேவை. தூர இடங்களைச் சேர்ந்தவர்களுக்கு பாதுகாப்பான தங்குமிடம், உணவு வழங்கப்படும். மாத வேதனம் 10, 000 ரூபா. தொடர்புகளுக்கு: 077 968 4284.

---

கணக்காளர் கம்பனி ஒன்றிற்கு ஓய்வு பெற்ற கணக்காளர் தேவை. வயது எல்லை 55 இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு: maswin 555 @vrt-group.com. தொலைபேசி: 077 301 7994.

---

msoffice, Desk top publishing தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. அச்சக வேலை அறிவும் வலிகாமம் பகுதியைச் சேர்ந்தவர்களும் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு 075 049 7894.

---

லேத் ஒப்பரேட்டர், மில்லிங் ஒப்பரேட்டர், A/C fridge ரெக்னீசியன் (Air conditioner) ஆகிய வேலைகளுக்கு இரண்டு வருட அனுபவமுள்ளவர்கள் இன்று காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 12 வரை நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு: முகாமையாளர் லக்ஷ்மி இன்சினியறிங், 105, இராஜ வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம்: 021 567 0256.

---

யாழ்.காங்கேசன்துறை வீதி, யாழ்.இந்துக்கல்லூரிக்கு அருகில் உள்ள யாழ்.கொழும்பு பிறிண்டேர்ஸ் நிறுவனத்திற்கு ஆளணி தேவை. விருப்பமுடையோர் எதிர்வரும் புதன் கிழமை மதியம் 1 மணியில் இருந்து 3 மணிக்குள் நேரில் வரவும்.

---

சர்வதேச பாடசாலையின் ஆரம்பப் பிரிவுக்கு (montessori) தகுதியும், ஆங்கில அறிவும் அனுபவமும் உடைய ஆசிரியைகள் தேவைப்படுகின்றனர். ஆர்வமுடையோர் தங்கள் சுயவிபக்கோவையை அனுப்பவேண்டிய முகவரி: Principal, Aston International College, k.k.s Road,Jaffna.

---

தனியார் விமான நிலையம் ஒன்றிற்கு கிளீனர், பாதுகாப்பு உத்தியோகத்தர், சாரதிகள் உடனடியாகத் தேவை. அகவை 18 தொடக்கம் 50 வரை. உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு. சம்பளம் 18, 000 ரூபா, 25,000 ரூபா, 30,000 ரூபா. தொடர்புகளுக்கு: 077 456 8264.

---

க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனி ஒன்றிற்கு 16 தொடக்கம் 55 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர். உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு. சம்பளம் 25,000 ரூபா. தொடர்புகளுக்கு: 077 303 2004, (அனுராதபுரம்.)





கைதடி தெற்கு மின்னொளி பாலர் கல்வி நிலையத்தில் கல்வி கற்று பாடசாலை செல்லவுள்ள மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கைதடி தெற்கு சனசமூக நிலைய அரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சில பதிவுகள்... (80)

# ஐ.நா. வின் அண்மைய செயற்பாடுகள் கடும்தொனியில் சாடுகிறது அரசு

(கொழும்பு)

வடக்கின் இறுதி யுத்தகாலத்தில் ஐ.நா அங்கு என்ன செய்தது என்ற அடிப்படையில் வெளியிடப்பட்ட உண்மை அறிக்கையை ஆராய ஐ.நா. சபை உபகுழு நியமிக்கப்பட்டமைக்கு இலங்கை அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சாள்ஸ் பெட்றி குழுவின் அறிக்கையை ஐ.நா பொதுச் செயலர் வெளியிட்ட பின்னர், அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருந்த போதிலும், இலங்கை அரசுடன் ஐ.நா. இன்னமும் தொடர்பு கொள்ளவில்லை என்று வெளிவிவகார செயலர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்த மீளாய்வு அறிக்கை ஐ.நாவின் செயற்பாடுகள் குறித்த ஒரு உள்ள ஆவணம்.

அவர்கள் பல பரிந்துரைகளைச் செய்துள்ளனர். ஆனால் அவர்கள் எம்மிடம் எதையும் கேட்கவில்லை.

எம்முடன் இணைந்து செய்வதற்கு எதுவும் இல்லை என்று அவர்கள் கருதக்கூடும். பெட்றி அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக, விசாரிக்க நியமிக்கப்படவுள்ள குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவது குறித்த அரசாங்கம் இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை. ஒத்துழைப்பு வழங்கும்படி அவர்கள் எம்மை இதுவரை கேட்கவில்லை.

# புதிய கட்டடத்தில் சமுர்த்தி வங்கி இயங்குமா?

கைதடி பிரதேச சமுர்த்தி வங்கிக்கான கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு பல மாதங்களாகியும் இதுவரை திறந்து வைகககப்படவில்லை.

இதனால் தற்போதைய வங்கிக்கு பெரும் சிரமத்தின் மத்தியில் மக்கள் செல்ல வேண்டியுள்ளது.

இவ் வங்கி யாழ் கண்டி வீதியில் வாகனப் போக்குவரத்து அதிகமாக உள்ள இடத்தில் இருப்பதனால் தாம் பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக சமுர்த்தி பயனாளிகள் மிகுந்த விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக பிரதேச செயலர் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும அப்பகுதி மக்கள் கோரிகை விடுத்துள்ளனர். (90)

# முசலிப் பிரதேச முதியவர்கள் சபிக்கப்பட்ட மனிதர்களா?

## சமூகசேவைத் திணைக்களம் உறக்கம்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளை கொண்ட மாவட்டம் ஆகும் அதில் கடந்த காலம் யுத்தம் காரணமாக அதிகமான பாதிப்புகளை எதிர்கொண்ட பிரதேசமாக முசலிபிரதேசம் உள்ளது.

சமாதானத்தின் பிண்பு முசலிப் பிரதேசமக்கள் மீள்குடியேறி 5 வருடங்கள் முடிவடைந்த நிலையில் முசலிப்பிரதேச நிர்வாகம் சீரானநிலையில் இயங்கி கொண்டு வருகின்ற வேலையில் முதியோர்களின் நலன்களில் இன்னும் கவனம் செலுத்தப்படவில்லை .

ஜனாதிபதியின் மகிந்த சிந்தனையில் உள்ள பிரதான திட்டமாக முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் முகமாக கடந்த 2000 ஆம் ஆண்டின் 09 இலக்கம் கொண்ட முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் கிராமியமுதியோர் நிறுவனங்களைப் பதிவு செய்தல் வேண்டும் .

அந்தச் சட்டத்தின் கீழ் சமூக சேவைகள் அமைச்சின் கீழ் முதியோர் செயலகம் உருவாக்கப்பட்டு நாட்டில் எல்லாமாவட்டத்திலும் மற்றும் பிரதேச செயளார் பிரிவிலும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

அதன் ஊடாகமுதியோர்களுக்குதேவையான தேசிய அடையாள அட்டை மாதாந்தம் 1000 பணம் ஊனமுற்றேர்களுக்கு வண்டி ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் முதியோர் மண்டபம் முதியோர்களின் பிள்ளைகளுக்கு தேவையான அடிப்படைவசதிகள் இலவச பஸ் வசதிகள் இதே போன்று இன்னும் வசதிகள் உள்ளன .

மேலும் முசலிப் பிரதேச செயலாலர் பிரிவில் 24 கிராம உத்தியேத்தர் பிரிவுள்ளது. இதில எந்த கிராமஉத்தியோத்தர் பிரிவிலும் இது வரைக்கும் (சமுக சேவை உத்தி யோத்தர் அல்லது முதியோர் மேம்பாட்டு உத்தயோகத்தர்) இது சம்பந்தமாகஎந் நவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என முசலிபிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# பொன்னரசன் குளம் கொலை சந்தேக நபருக்கு எதிராக வழக்கு

(வவுனியா)

வவுனியா - பொன்னரசன் குளம் பகுதியில் கிணற்றில் தள்ளி ஒருவரை கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த நபர் கொலை செய்யப்பட்டு கிணற்றிற்குள் போடப்பட்டுள்ளதாக பிரேத பரிசோதனைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்தில் 58 வயதான மூன்று பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

# பெண்களுக்கெதிரான வன்முறை கிளிநொச்சியில் பேரணி

பெண்களுக்கெதிரான வன்முறையைத் தவிர்ப்போம் சர்வதேச தினம் 2012 எனும் தொனிப் பொருளிலான ஊர்வலம் கடந்த செவ்வாய்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி நகரில் கந்தசுவாமி கோயிலின் முன்றலில் ஆரம்பமாகி கரைச்சி பிரதேச செயலகத்தை அடைந்தது. இந் நிகழ் விற்கு பெண்கள் அமைபபு பிரதிநிதிகளும் அரச திணைக்கள உத்தியோகததர்களும் கலந்துகொண்டனர்

இவ் வேலைத்திட்டத்திற்கான நிதி அனுசரணையை UNHCR, DRC, SGBV FORUM KILINOCHCHI ஆகிய அமைப்புக்கள் வழங்கின.

கரைச்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் விழிப்புணர்வு கலந்துரையாடலும் விபரணத் திரைப்படமும் காண்பிக்கப்பட்டது.

பொலிஸ் அத்தியட்சகர் சிறிசெல்வம் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளும் பிரதேச செயலக மாவட்டச் செயலக அதிகாரிகளும் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினார்கள்.


இந் நிகழ்வை கிளிநொச்சி மாவட்டச் செயலகம் கரைச்சி பிரதேச செயலகம் ஆகியவை உள்ளூர் அமைப்புக்களுடன் இணைந்து நடத்தின. (90)

# பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும்

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போடடிகளுக்கான பரிசளிப்பும் நூல் வெளியீடும்

யாழ் பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதீதியாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதியோகேஸ்வரி பற்குணராஜா, பருத்தித்துறை பிரதேச செயலர் சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டு பாரிசில்களை வழங்கி வைத்தனர்.



இந்த நிகழ்வின்போது யாழ் நூலக சிறுவர் பகுதியினரால் உருவாக்கப்பட்ட "பூஞ்சிட்டு" சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெற்றது இந்த நிகழ்வில் மாணவர்கள் பெற்றோர்கள் எனப பலரும் கலந்துகொண்டனர்.(02)

# பரீட்சை வினாத்தாள் முன்கூட்டியே வெளியாகியதா?

## ஆசிரியர் சங்கம் சந்தேகம்

நாடளாவிய ரீதியில் தற்போது நடைபெற்று வருகின்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப்பரீட்சையில் விஞ்ஞான வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னதாகவே வெளியாகிவிட்டதா? என்பது தொடர்பிலான விசாரணைகளை குற்றப்புலனாய்வு பிரிவினர் (சி.ஐ.டி) மேற்கொண்டு வருகின்றனர்.

தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் ஆசிரியரால் வழங்கப் பட்டுள்ள மாதிரி வினாத்தாளில் உள்ள கேள்விகளில் 18 கேள்விகளும் படங்களும், விடைகளும் பரீட்சையின் போது வழங்கப்படட வினாத்தாளில் உள்ள கேள்விகளும், பதில்களும், படங்களும் ஒரேமாதிரியாக இருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்ததை அடுததே இது தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

38. யாரால் எழுதப்பட்டது?

..........................................................................................


39. இந்நிகழ்வு யாருக்குச் செய்யப்படுகின்றது? எப்போது நடைபெறும்?


..........................................................................................

**பின்வரும் சொற்களின் ஆங்கிலக் கருத்தை எழுதுக.**

40. ஞாயிற்றுக்கிழமை .................................... 41. கடிதம் ....................................

**இலக்கம் 42 - 46 வரையிலான வினாக்களுக்காகத் தரப்பட்டுள்ள குறியீட்டு விபரங்களைக் கவனித்து தரப்பட்டுள்ள குறியீட்டு உருக்கள் குறிக்கும் செய்தியை எழுதுக.**



42. ..........................................................................................

43. ..........................................................................................


44. ..........................................................................................


45. ..........................................................................................

46. ..........................................................................................

47. "எனது வீட்டுப் பூந்தோட்டம்" என்னும் தலைப்பில் கருத்துள்ள ஆறு வாக்கியங்கள் எழுதுக.

**குறியீடுகளும் அவற்றின் அர்த்தங்களும் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது. அதை அவதானித்து குறியீடுகளுக்கான அர்த்தங்களைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**



48. ..........................................................................................

49. ..........................................................................................

50. ..........................................................................................





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

2 மணி

# கல்வி முரசு

வெளியீடு **20**



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**பந்தியைக் கவனமாக வாசித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

எமது நாட்டில் ரம்புட்டான் மல்வாணைப் பிரதேசத்தில் சிறப்பாக வளரும். ரம்புட்டான் பழத்தின் தாயகம் மலேசியா ஆகும். சித்திரைப் புதுவருடத்தின் போது ரம்புட்டான் மரங்களில் பூ பூக்கும். ரம்புட்டான் பழத்தைக் கொத்துக் கொத்தாகக் கொய்து எடுப்பர். வாழையும் குணமிக்க ஒரு பழம் இதரை, கப்பல், கதலி என்று வாழையினங்கள் உண்டு. சாம்பல் வாழை, கறி வாழை சமைக்க உதவும். மா சுவையான பழமாகும். இதில் கிளி மூக்கன், கருத்த கொழும்பான் எனப் பல உண்டு. மாம்பழத்தினால் சட்னி, அச்சாறு, ஊறுகாய் என்பன தயாரிக்கலாம். பழம் காய்க்கும் காலங்களில் காகம், வௌவால், அணில், குரங்கு ஆகியனவரும். பிராணிகளிடமிருந்து பழங்களைப் பாதுகாக்க விவசாயிகள் பல உபாயங்களைக் கையாளுகின்றனர்.

01. இங்குள்ள பழ வகைகள் மூன்றும் எவை?

..........................................................................................

02. இலங்கையில் ரம்புட்டானுக்குப் பிரசித்தி பெற்ற இடம் எது?

..........................................................................................

03. ரம்புட்டான் மரத்தின் தாயகம் எது?

..........................................................................................

04. வாழையின் இனங்கள் இரண்டின் பெயர்கள் தருக.

..........................................................................................

05. கறி சமைக்க உதவும் வாழை எது?

..........................................................................................

06. மாங்காய் இன வகைகளின் பெயர்கள் இரண்டு தருக.

..........................................................................................

07. பழம் காய்க்கும் காலத்தில் வரும் பிராணிகள் நான்கின் பெயர்களைத் தருக.

..........................................................................................

**பொருத்தமான விடையினை இணைக்குக.**

| | | |
|---|---|---|
| 08. | 7 X 2 | 35 |
| 09. | 3 X 5 | 70 |
| 10. | 4 X 3 | 14 |
| 11. | 5 X 7 | 12 |
| 12. | 10 X 7 | 15 |

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**




13. எதிரிகள் துரத்தும்போது வாலை அறுத்துவிட்டுத் தப்பி ஓடும் பிராணி எது?
   1. ஓணான் 2. எலி 3. பல்லி 4. அணில்

14. முட்டை, இறைச்சி என்பவற்றைத் தரும் பிராணி எது?
   1. கோழி 2. ஆடு 3. கிளி 4. புறா

15. உணவு உண்பதற்குப் பயன்படுத்தும் உபகரணம் எது?
   1. கரண்டி 2. துடைதுண்டு 3. நீர்க்குவளை 4. குளிர்பானம்

16. பச்சையாக உண்ணக்கூடிய இலை வகை எது?
   1. கீரை 2. அகத்தி 3. வல்லாரை 4. கரட்

17. பின்வருவனவற்றில் விஷத்தன்மையுள்ள பிராணி எது?

1)  2)  3)  4) 

.................... .................... .................... ....................

**மாலினி தன்னைச் சுற்றி பாடப் புத்தகங்களை எவ்வாறு வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள் என்பது கீழே காட்டப்பட்டுள்ளது.**




18. மாலினிக்கு கிழக்குத் திசையில் உள்ள புத்தகம் எது?

..............................................................................

19. மாலினி தனக்கு எத்திசையில் கணிதப் புத்தகத்தை வைத்துள்ளாள்?

..............................................................................

20. சுற்றாடல் புத்தகம் உள்ள இடத்தில் இருந்து பார்த்தால் மாலினி எத்திசையில் அமர்ந்திருப்பதுபோல் தோன்றும்?

..............................................................................

21. மாலினிக்கு மேற்குத் திசையில் உள்ள புத்தகம் யாது?


..............................................................................

22. விஞ்ஞானப் புத்தகம் மாலினிக்கு எத்திசையில் உள்ளது?

..............................................................................

**கீழேயுள்ள பந்தியை நன்கு கவனமாக வாசித்து அதன் கீழேயுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

அரிசி, காய்கறி முதலிய உணவுப் பொருட்களைத் தருபவன் விவசாயி. அவன் வயல், தோட்டம் முதலிய இடங்களில் பயிர் வகைகள் உண்டாக்குகின்றான். விவசாயி மழை பெய்ததும் வயலை உழுகின்றான். பசளையிட்டுப் பண்படுத்தி நெல்லை விதைக்கின்றான். மழை இல்லாத காலங்களில் குளங்களில் இருந்து நீர் பாய்ச்சுவார்கள். யாழ்ப்பாணப் பகுதியில் மழையை நம்பியே நெல் விதைக்கின்றார்கள்.





23. உணவுப் பொருட்களை விளைவித்துத் தருபவன் யார்?

..............................................................................

24. பின்வரும் சொற்களுக்குரிய பன்மைச் சொற்களை எழுதுக.

1. விவசாயி .................... 2. காய்கறி ....................
3. வயல் .................... 4. குளம் ....................

25. பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.

1. விவசாயி ....................
2. வதை ....................

26. மழை இல்லாத காலங்களில் எங்கிருந்து நீர் பெறப்படுகின்றது?

..............................................................................




27. யாழ்ப்பாணப் பகுதி விவசாய மக்கள் எந்நீரை நம்பி நெல் விதைக்கின்றார்கள்?

..............................................................................

28. "பசளையிட்டு" என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.

..............................................................................

**உமது வீடுகளில் உணவுக்காகப் பயன்படுத்தப்படும் பின்வரும் மரக்கறி வகைகளின் பெயர்களை படத்தை அவதானித்து எழுதுக.**

29.  30.  31. 

.................... .................... ....................

**எதிர்ச் சொல் தருக.**

32. நண்பன் .................... 33. நன்மை ....................

34. இருள் .................... 35. மகிழ்ச்சி ....................

**கீழ்வரும் கடிதத்தினை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

அன்புள்ள நண்பி நிசானாவுக்கு,

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 25.12.2011 ஆம் திகதி அன்று பிற்பகல் 5 மணியளவில் எனது பிறந்த நாளைச் சிறப்பாக வீட்டில் கொண்டாடவுள்ளேன். அத்தருணம் நீரும் உமது குடும்பத்தாரும் வருகை தந்து விருந்துபசாரத்தில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு மகிழ்வுடன் அழைக்கின்றேன்.

இவ்வண்ணம்,
ம.றிஸ்மியா


36. மேலே குறிப்பிட்ட கடிதம் எந்த நிகழ்விற்காக அழைக்கப்படுகின்றது?

..............................................................................

37. இக்கடிதம் யாருக்கு எழுதப்படுகின்றது.

..............................................................................

# பொருளாதார வளர்ச்சி பெருமளவு பாதிப்பு பணவீக்க விகிதம் உயர்ந்துள்ளது



எதிர்மறை சிந்தனைகளால் நாட்டின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் கவலை தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பு கருத்தரங்கில் பேசிய பிரதமர், நாட்டின் பண வீக்க விகிதம் பெருமளவில் உயர்ந்துவிட்டதாகக் கூறினார்.

இதனை 5 அல்லது 6 சத வீதமாக குறைக்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ள தாகவும் குறிப்பிட்டார்.

கடந்த 10 ஆண்டுகளாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8 விழுக்காடு என்ற அளவில் இருப்பதாக தெரிவித்த பிரதமர், தேசிய அளவிலும் மாநில அளவிலும் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பொருளாதார சீர்திருத்தத்திற்காக எடுக்கப்பட்ட சில முடிவுகள், அரசியல் ரீதியாக சிக்கல் இருந்ததாக கூறிய பிரதமர், அந்த முடிவுகளை எதிர்ப்பவர்கள், நடைமுறைக்கு ஒத்துவராத பழைய சிந்தாந்தத்தை பின்பற்றுபவர்கள் என குற்றம்சாட்டினார்.

மேலும், சர்வதேச அளவில் 2008இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை இந்தியா சமாளித்தது எனவும் குறிப்பிட்டார்.




# அரசு விழாவில் கரினா கபூர் குத்தாட்டம் 1.4 கோடி செலவு செய்த அவலம்



சட்டீஸ்கர் மாநிலத்தில் அரச விழாவில் நடிகை கரினா கபூர் நடன மாட ரூபா 1.4 கோடி செலவிடப்பட்ட சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய பிரதேச மாநிலத்திலிருந்து சட்டீஸ்கர் மாநிலம் உருவாக்கப்பட்டதன் ஆண்டு விழா சமீபத்தில் நடந்தது.

இந்த விழாவில் பிரபல நடிகை கரி-னா கபூரின் நடனம் இடம்பெற்றிருந்தது.

இந்த விழாவில் அவர் ஆடுவதற்கு கொடுக்கப்பட்ட தொகை ரூபா 1.4 கோடி.

வெறும் 8 நிமிடங்களே நடந்த இந்த நடனத்திற்கு ரூபா 1.4 கோடி செலவிடப்பட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# பாகிஸ்தான் அமைச்சர் இந்தியா விஜயம் விசா கட்டுப்பாடுகள் தளர வாய்ப்பு




பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் 3 நாட்கள் அரசு முறைப்பயணமாக இந்தியா வந்துள்ளார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் உறவுகள் மேம்பட்டுவரும் ஒரு சூழலில் இந்தப் பயணத்தை ரஹ்மான் மேற்கொண்டுள்ளார்.

இந்தியர்கள் பாகிஸ்தானுக்கும் பாகிஸ் தானியர்கள் இந்தியாவுக்கும் வருவதில் உள்ள விசா கெடுபிடிகளைத் தளர்த்தும் அறிவிப்புகளை ரஹ்மான் மாலிக்கும் இந்திய உள்துறை அமைச்சர்களும் அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விசா கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதால் உறவினர்களிடையிலான பயணங்களில் சிரமம் குறையும் என்றும் வர்த்தக நோக்கிலான பயணங்கள் ஊக்கம் பெருகும் எனவும் கருதப்படுகிறது.

4 ஆண்டுகளுக்கு முன்னர் மும்பையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களின் சந்தேக நபர்களாக இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பாகிஸ் தானியப் பிரஜைகள் மீதான சட்ட நடவடிக்கையில் விரைவில் முன்னேற்றம் ஏற்படும் என்று இந்தியா அறிவிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



டில்லி வந்துள்ள பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக், பா.ஜ. தலைவர் சுஷ்மா சுவராஜை சந்தித்து பேசினார்.

# காற்றழுத்த தாழ்வு நிலை மழை பெய்ய வாய்ப்பு

வங்கக் கடலில் உருவாகியுள்ள புதிய காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, தமிழகத்தின் தென் கடலோர மாவட்டங்களில் மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காற்றழுத்த தாழ்வு நிலை தற்போது தென்மேற்கு வங்கக் கடல் பகுதிக்கு நகர்ந்து வருகிறது.

இதனால், திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், கன்னியாகுமரி, தேனி ஆகிய தென் மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு இந்த மழை தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் பலமான காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழகத்தின் மற்ற பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவும் என்றும், சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# இந்தியா வல்லரசாவதை விரும்பாதவர்களே கூடங்குள அணுஉலை எதிர்ப்பாளர்கள்

கூடங்குளம் அணுஉலை எதிர்ப்பாளர்கள் அனைவரும் இந்தியா வல்லரசு ஆவதை விரும்பாதவர்கள் என்று இந்தியாவிற்கான ரஷ்ய தூதர் அலெக்சாண்டர் கடாகின் கூறியுள்ளார்.

ரஷ்யா நாட்டின் பெரும்பங்கு உதவியுடன் தான் கூடங்குளத்தில் அணுஉலைகள் தயாராகி வருகின்றன.

இந்த அணு உலை செயல்பாட்டிற்கு அப்பகுதி மக்கள் கடந்த 2011ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சென்னையில் நேற்றுமுன்தினம் 40ஆவது ஆண்டு ரஷ்ய கலைவிழாவை தொடங்கி வைத்து கடாகின் பேசுகையில் இந்திய, ரஷ்ய கலாசாரம் பாரம்பரியமிக்கது.

இதனால்தான் ஆண்டுதோறும் ரஷ்ய கலை விழா நடத்தப்படுகிறது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதலாவது யூனிட் மின்சார உற்பத்திக்கு தயாராக உள்ளது.




அதேபோல இரண்டாவது யூனிட் அணு உலை பணிகள் இன்னும் 6 மாத காலத்தில் முடிவடையும்.

கூடங்குளம் அணு உலைக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள், உலக அரங்கில் இந்தியாவின் வளர்ச்சியை தடுக்க நினைப்பவர்கள் என்றார்.

# பயங்கரவாத தடுப்புச் சட்டம் திருத்தங்களை கைவிட வேண்டும்

இந்தியாவில் அமுலில் உள்ள சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட திருத்தங்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரிக்க வேண்டும் என்று மனித உரிமைகள் அமைப்பான ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் கோரியுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டமாக பயன்படுத்தப்படும் இச்சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வர நாடாளுமன்ற மக்களவை நவம்பர் 30 ஆம் திகதியே ஒப்புதல் அளித்துள்ளது.

தீவிரவாத அமைப்பு ஒன்றை தடை செய்யும் காலப் பகுதியை இரண்டு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாக அதிகரிக்கவும் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய நபர் என்ற வரையறையை விரிவாக்கவும் இந்தச் சட்ட திருத்தம் வழிகோலியுள்ளது.

இந்தச் சட்டத் திருத்தம் தொடர்பாக வரும் 17 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடக்கவுள்ள நிலையில் ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் அமைப்பின் இந்தக் கோரிக்கை வந்துள்ளது.

இந்தியாவில் தடா, பொடா போன்ற பல பயங்கரவாத தடுப்பு சட்டங்கள் இருந்தன. இவை தற்போது இல்லை என்றாலும், 2008 ஆம் ஆண்டு மும்பைத் தாக்குதல் உள்ளிட்ட பல தொடர் தாக்குதல்களுக்குப் பின்னர் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ........................................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# அழுக்கான நகரங்களில் மும்பைக்கு முதலிடம்

இந்தியாவின் வர்த்தக நகரமான மும்பை, உல-கில் மிகவும் அழுக்கான நகரங்களில் முதலிடம் பிடித்துள்ளது. அமெரிக்காவை சேர்ந்த, "டிரிப் அட்வைசர்ஸ்" என்ற நிறுவனம், உலகம் முழுவதும் உள்ள, 40 முக்கிய சுற்றுலா நகரங்கள் குறித்தும், அந்த நகரங்களில் உள்ள தெருக்களின் தூய்மை குறித்தும், அங்குள்ள பல்வேறு வசதிகள் குறித்தும் ஆய்வு ஒன்றை நடத்தியது.

அந்த ஆய்வின் முடிவில் கூறப்பட்டுள்ளதாவது; உலகில், மிகவும் சுத்தமான தெருக்களை கொண்ட நகரங்களில், ஜப்பானின் டோக்கியோ நகர் முதலிடம் வகிக்கிறது. இந்தப் பட்டியலில், மும்பை கடைசி இடத்தைப் பிடித்துள்ளது.சிறப்பான டாக்சி சேவை, நட்பாக பழகும் டாக்சி டிரைவர்கள், சிறப்பான பஸ் போக்குவரத்து, சுத்தமான தெருக்கள், பாதுகாப்பு



மற்றும் மிகவும் அலங்கரிக்கப்பட்ட நகரம் என்ற வரிசையிலும், டோக்கியோ நகர் முதலிடத்தைப் பிடித்துள்ளது. நல்ல சாலைகள், விமானம், ரயில் மற்றும் பஸ் போக்குவரத்து சேவைகளில், மும்பை நகரம் கடைசி இடத்தைப் பிடித்துள்ளது. கரடு முரடான உள்ளூர்வாசிகளை அதிகம் கொண்ட நகராக, ரஷ்யாவின் மாஸ்கோ உள்ளது. இவ்வாறு ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# படைகளை களமிறக்கியது அமெரிக்கா; சிரியாவுக்கு எதிராக துருக்கியில் குவிப்பு!

சிரியாவின் தாக்குதல் மிரட்டலை தொடர்ந்து துருக்கிக்கு ஆதரவாக அமெரிக்கப் படை விரைந்துள்ளது. சிரியாவில் அதிபர் பஷர் அல்- ஆசாத்துக்கு எதிராக கடந்த 2 ஆண்டுகளாக பொது மக்கள் போராடி வருகிறார்கள். அவர்களுக்கு ஆதரவாக புரட்சி படையினர் இராணுவத்துடன் போரிட்டு வருகின்றனர். இவர்களுக்கு துருக்கி ஆதரவளிக்கிறது.

இதனால் ஆத்திரம் அடைந்துள்ள சிரியா ஸ்கட் ஏவுகணைகள் மூலம் துருககி மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலைமையை சமாளிக்க துருக்கிக்கு அதன் நட்பு நாடான அமெரிக்கா ஆதரவு கரம் நீட்டியுள்ளது. அதன் எதிரொலியாக அமெரிக்க படைகள் துருக்கி நாட்டுக்கு விரைந்துள்ளன. அதற்கான உத்தரவில், அமெரிக்க இராணுவ மந்திரி லியான் பெனேட்டா கையெழுத்திட்டுள்ளார்.

அதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள 400 அமெரிக்க வீரர்கள் துருக்கி செல்கின்றனர். இவை தவிர 2 கம்பெனி பேட்ரியாட் ஏவுகணைகளும் துருக்கிக்கு வழங்கப்படுகிறது.

இந்த ஏவுகணை சிரியா ஏவும் ஸ்கட் ஏவுகணையை தடுத்துத் தாக்கி அழிக்க வல்ல சக்தி படைத்தது. எனவே, துருக்கி செல்லும் அமெரிக்க வீரர்கள் பேட்ரியாட் ஏவுகணைகளைச் செலுத்தும் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.



இதற்கிடையே, அமெரிக்காவுக்கு ஆதரவாக ஜேர்மனி 400 இராணுவ வீரர்களையும், நெதர்லாந்து 360 வீரர்களையும் துருக்கிக்கு அனுப்ப சம்மதம் தெரிவித்துள்ளன.

## உலகம் அழியப் போவதாக பிரசாரம் செய்த சீனர்கள் கைது

வருகிற 21 ஆம் திகதியுடன் உலகம் அழியப் போகிறது என ஊர் ஊராக சென்று பிரசாரம் செய்த சிலரை சீன பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாயன் காலண்டர் படி, வருகிற 21 ஆம் திகதி உலகம் அழியப் போகிறது என நம்பும் சீனர்கள் ஒன்றிணைந்து பல ஊர்களில் கூட்டம் நடத்துவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இவர்கள் சீனாவின் மத்திய பகுதிகளிலும், மேற்கு மாகாணங்களிலும் பல இடங்களில் இவ்வாறு கூட்டம் நடத்தி உள்ளனர். இந்நிலையில் பொய்யான செய்திகளை பரப்புவதாக கூறி, இவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த விடயம் சீனாவில் மட்டுமல்லாது உலகம் முழுவதும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.



மெக்சிகோ சிட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற குத்துச்சண்டை வீரர் ஜுவன் மானுவேல் மார்கியூசை பாராட்டும் ஜனாதிபதி என்ரிக் பெனா நியாடோ (வலது).

## நெல்சன் மண்டேலாவுக்கு அறுவைச் சிகிச்சை



தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும், நிறவெறிக்கு எதிராக போராடியவருமான நெல்சன் மண்டேலாவுக்கு அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது.

நுரையீரல் தொற்று காரணமாக கடந்த வாரம் பிரிட்டோரியாவில் உள்ள தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதனை செய்ததில் அவரது பித்தப்பையில் கற்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து நேற்று காலை எணடோஸ்கோபி சிகிச்சை மூலம் பித்தப்பை கற்கள் அகற்றப்பட்டன.

இந்த அறுவைசிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்ததாகவும் அவரது உடல் நலம் தேறி வருவதாகவும் ஜனாதிபதி அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது. சிறையில் இருந்தபோது காசநோயால் பாதிக்கப்பட்ட மண்டேலா தொடர்ந்து பல வருடங்களாக நுரையீரல் நோயால் அவதிப்பட்டு வருகிறார். கடைசியாக 2011-ல் கடுமையான சுவாச நோய் காரணமாக இரண்டு நாட்கள் தீவிர சிகிச்சை பெற்றது குறிப்பிடத்தக்கது.

## விண்வெளி ஆராய்ச்சியில் சீனாவின் புதிய சாதனை



விண்வெளியில் குறுங்கோள் ஒன்றின் புகைப்படங்களை எடுத்து அனுப்பியுள்ளது சீனாவின் சாங்கி-2 விண்வெளி ஓடம்.

சூரியனை சுற்று வரும் குறுங்கோள்களை புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்வதற்காக சாங்கி-2 என்ற விண்வெளி ஓடத்தை சீனா அனுப்பியது.

தற்போது பூமியிலிருந்து 70 இலட்சம் கிலோமீற்றர் தூரத்தில் சென்று கொண்டிருந்த "தௌடாட்டிஸ்" என்ற குறுங்கோளை புகைப்படம் எடுத்து அனுப்பியுள்ளது.

குறுங்கோளிலிருந்து 3.2 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தபடி எடுக்கப்பட்ட அந்தப் படங்கள் துல்லியமாக இருந்ததாக சீன விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் வரும் ஜனவரிக்குள் பூமியிலிருந்து ஒரு கோடி கிலோ மீற்றர் தூரம் வரை உள்ளவற்றை புகைப்படம் எடுக்கும் பணியில் சாங்கி-2 ஈடுபடுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே 5 கிலோ மீற்றர் தூரம் நீளமுள்ள தௌடாட்டிஸ் குறுங்கோள், பூமி மீது மோதினால் கடும் அழிவுகளை ஏற்படுத்திவிடும்.


எனினும் இப்போது வெகு தூரத்தில் சுற்றிவருவதால், பூமியைத் தாக்கும் வாய்ப்பு மிகவும் குறைவு என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

## விமான நிலையத்தின் மீது தாக்குதல் பாகிஸ்தானில் தீவிரவாதிகள் அட்டூழியம்

பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் உள்ள விமான நிலையத்தின் மீது நடத்தப்பட்ட ரொக்கெட் தாககுதலில் 7 பேர் பலியாகினர், 50 பேர் படுகாயமடைந்தனர்.

பாகிஸ்தானின் முக்கிய நகரங்களுள் ஒன்றான பெஷாவரில் உள்ள விமான நிலையம் மீது தீவ்ரவாதிகள் ரொக்கெட் வெடிகுண்டு மூலம் தாக்குதல் நடத்தினர்.

மேலும் துப்பாக்கி சூடு நடத்தியதால், பாதுகாப்பு படையினர் திருப்பி சுட்டனர். இரு தரப்பினரிடையே தொடர்ந்து பயங்கர மோதல் நடைபெற்றது. இச்சம்பவத்தில் தாக்குதல் நடத்திய ஐந்து பேர் பலியாயினர் என கைபர் மாகாணத்தை சேர்ந்த தகவல் தொடர்புத்துறை அமைச்சர் இப்திகார் ஹுசைன் தெரிவித்தார்.



மேலும் அவர் கூறுகையில், தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் முதல் ரொக்கெட் குண்டு விமான ஓடுதளத்திலும் மற்றொன்று வெளிப்பகுதியிலும் வெடித்தது எனக் கூறினார்.

மேலும் காயமடைந்தவர்கள் விமான நிலையம் அருகே உள்ள கைபர் டீச்சிங் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்ககூடும் என அஞ்சப்படுகிறது.

தொடர்ந்து விமான நிலையம் பாகிஸ்தானின் விமானப்படையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

## சிரிய ஜனாதிபதிக்கான ஆதரவை ரஷ்யா கைவிட வேண்டும்

### வலியுறுத்துகிறது அமெரிக்கா

சிரியா ஜனாதிபதி பஷார் அல்-அஸாத்துக்கு வழங்கி வரும் ஆதரவை ரஷ்யா கைவிட வேண்டும் என்று அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்க அதிபர் மாளிகை செய்தித்தொடர்பாளர் ஜே கார்னே செய்தியாளர்களிடம் கூறியதாவது, ''பொதுமக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களை பஷார் அல்-ஆஸாத் பயன்படுத்தினால் கடும் விளைவுகளைச் சந்திப்பார். இந்த விஷயத்தில் நாங்கள் விடுத்துள்ள எச்சரிக்கையை புறந்தள்ளிவிட்டு அவர் செயறபட்டால், அதற்குரிய பலனை அவர் அனுபவிக்க நேரிடும் என்றார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் பேட்ரிக் வென்ட்ரெல் கூறியதாவது,

சிரியாவில் உள்ள பெரும்பாலான மக்கள், சுதந்திர, ஜனநாயக, ஒருங்கிணைந்த சிரியா அமைய வேண்டும் என்று விரும்புகின்றனர். அதைத்தான் நாங்களும் விரும்புகிறோம். இப்போது நடைபெறுகிற புரட்சியை திசை திருப்ப ஒரு தீவிரவாதக் குழு முயற்சிப்பதாக அறிகிறோம். அவர்களை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

நாங்கள் சிரிய மக்களுக்கு ஆதரவாக உள்ளோம். அந்நாட்டு மக்களுக்கு ஆதரவாக, சர்வதேச நாடுகளுடன் இணைந்து செயற்பட ரஷ்யா முன்வர வேணடும். ஆஸாத் இல்லாத அரசியல் மாற்றம் ஏற்படுவது உறுதி. சிரியா விவகாரத்தில் ரஷ்யா ஆக்க பூர்வமாகச் செயற்பட வேண்டும். ஆஸாத்துக்கு ஆதரவாகச் செயற்படுவதைக் கைவிட வேண்டும். என்றார்.

## பிரித்தானியாவில் தாக்குதல் முயற்சி திட்டமிட்டவருக்கு கனடாவில் ஆயுள்

பிரித்தானியாவில் குண்டுத் தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்டதாக மொமின் காஜ்வா என்பவருக்கு கனடாவில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பின்லேடனை போற்றுபவராக இவர் கனேடிய நீதிமன்றினால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவருக்கு கனேடிய உச்சநீதிமன்றம் ஆயுள்கால தண்டனை விதித்துள்ளது.

தீவிரவாத செயல்களில் ஈடுபடவில்லை என்றும் சர்வதேச சட்டத்துக்கு உட்பட்டு ஆப்கானிஸ்தானுக்கு ஆதரவான ஆயுதப் போரில் ஈடுபட்டதாகவும் மொமின் காவ்ஜா கூறிய விளக்கத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாமல் ஆயுள் தண்டனையை வழங்கியுள்ளது.

# போர் முடிவடைந்த நிலையில் பதட்டத்தை ஏற்படுத்த முயற்சி

## அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு

நாட்டில் நீண்டகாலமாக நிலவி வந்த போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளபோதும் பதட்டமான சூழலை உருவாக்க சிலர் முயற்சித்து வருவதாக அமைச்சர் டக்ளஸ் தெரிவித்துள்ளார்.



நேற்றைய தினம் நடைபெற்ற யாழ். மாநகர சபையின் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித்திட்டம் எனும் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அபிவிருத்தித் திட்டங்களோடு மட்டும் நாங்கள் நின்றுவிட முடியாது அடுத்த கட்ட நிலையை அடைவதற்கும் நாங்கள் முன்னேறவேண்டும் இதற்குத் தடையாக சிலர் செயற்பட்டு வருகின்றனர். தற்போதுள்ள அமைதியை நிரந்தர அமைதியாக மாற்றுவதற்கு நாங்கள் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றுள்ளது. யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளுக்கு விளக்கேற்றுவதற்கும் வணக்கம் செலுத்துவதையும் யாரும் தடைபோட முடியாது தனி மனிதராக வீடுகளில் அல்லது வியாபார நிலையங்களில் இதனைச் செய்யும் போது யாரும் தடைவிதிக்க முடியாது அப்பாவி மாணவர்களைத் தூண்டிவிட்டு இவ்வாறான செயல்களைச் செய்வது கவலைக்குரிய விடயம் என்பதோடு கண்டிக்கத்தக்க விடயமும் ஆகும்.

தற்போது தீவகத்தின் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக வேலணை, நெடுந்தீவு, ஊர்காவற்துறை, பிரதேச சபைகளுக்கு தலா 100 மில்லியன் ரூபா வீதம் 300 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒதுக்கீடு செய்துள்ளார்.

அதேபோன்று யாழ். மாநகர சபைக்கும் விசேட நிதி ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

பொதுமக்களது கோரிக்கைகளுக்கும், தேவைகளுக்கும் முன்னுரிமையடிப்படையில் தீர்வு காணப்படும் என்றும் உறுதிபடத் தெரிவித்தார். (02)

# புனர்வாழ்வு பெறாத நிலையிலுள்ள முன்னாள் புலிகளுக்குப் புனர்வாழ்வு

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வரும், புனர்வாழ்வுப் பயிற்சிகளுக்கு உட்படுத்தப்படாத புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு பயிற்சிகளை வழங்குவது என பாதுகாப்பு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். புனர்வாழ்வுப் பயிற்சிகளை முடித்துக் கொண்டு, தமது சொந்தக் கிராமங்களில் சாதாரண வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள முன்னாள் புலிப் போராளிகளை, புனர்வாழ்வு பயிற்சிகளைப் பெறாதுள்ள, புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செயற்பட்டு வருவதே இதற்கான காரணமாகும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பாதுகாப்பு தரப்பின் உயர் அதிகாரிகள் மற்றும் புலனாய்வு பிரிவினர் இது குறித்து விரிவாக கலந்து ரையாடியுள்ளனர். இந்த நிலையில், இராணுவம் மற்றும் பொலிஸாரினால் அடையாளம் காணப்பட்டுள்ள புனர்வாழ்வு பயிற்சிகள் அளிப்படாத முன்னாள் புலி உறுப்பினர்களை பாதுகாப்புத் தரப்பினர் கைது செய்து, புனர்வாழ்வுப் பயிற்சிகளுக்கு உட்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஏற்கனவே பாதுகாப்பு தரப்பினரால், பல முன்னாள் புலிப் போராளிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சுயாதீனகுழு...

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு தொடர்பில் ஊடகங்கள் கடந்த 14 ஆம் திகதி செய்தி வெளியிட்டிருந்தன. பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக அரசியலமைப்பின் உறுப்புரை 107 இற்கு அமைய கொண்டுவரப்பட்ட குறறப்பிரேரணையில் உள்ள விடயங்களை ஆராய்வது நாடாளுமன்றத்தின் பொறுப்பாக உள்ளது.

எனவே, ஜனாதிபதி இந்த தீர்மானம் தொடர்பில் தான் என்ன செய்யவுள்ளார் என்பதனை நாடாளுமன்றத்திற்கு அறிவிக்கவேண்டுமே தவிர பத்திரிக்கைகளின் ஆசிரியர்களுக்கு அல்ல. முப்படைகளின் தளபதியும் இலங்கை ஜனநாயக குடியரசின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஊடகங்களுக்கு அறிவித் தல் வழங்குவதற்காக அழைக்கப்பட்ட கூட்டமே அதுவாகும்.

ஜனாதிபதி தலைமையிலான கூட்டத்திற்கு வந்தபோது ஊடகங்களின் ஆசிரியர்கள் கூட்டத்தைவிட்டு வெளியேறியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் தொடர்ந்தும் அங்கிருந்துவிட்டு ஜனாதிபதியுடன் காலை உணவை உண்டுவிட்டு வந்துள்ளனர்.

அரசியலமைப்பின் உறுப்புரை 107 இற்கு அமைவாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பிரதம நீதியரசரை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்வதை தவிர வேறுதெரிவு இல்லை. இந்த விடயத்தில் அவருக்கு தற்றுணிவு இல்லை. ஜனாதிபதி அவ்வாறு செய்யாது விடுவாராயின் அவர் அரசியலமைப்பை மீறியவராவார். அவர் உறுப்புரை 38(2) இன் கீழ் குற்றப்பிரேரணை மூலம் பதவியிறக்கப்படவேண்டியவர் ஆவார்.

மேலும், இந்தக் கட்டத்தில் விசாரணை நடத்த சட்டஏற்பாடுகள் இல்லை, நாடாளுமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்பது லட்டீமர் ஹவுஸ் கொள்கைக்கு எதிரானதாகும் எனத் தெரிவிககப்பட்டுள்ளது.

### திருத்தங்களுடன்...

சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். திவிநெகும சட்டமூலத்தை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமெனில் குறித்த சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்து, அதில் பெரும்பாலான சரத்துக்களை நாடாளுமன்றில் பெரும் பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும் என உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

அத்துடன் திவிநெகும தொடர்பான நிர்வாக வலயம் ஒன்றை உருவாக்குவது தொடர்பில் மக்களிடையே கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் அவ்வாறு இல்லாத பட்சத்தில் அமைச்சரவையினால் இவ்வாறான நிர்வாக வலயத்தின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான திருத்தம் மேற்கொள்ளப் பட வேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தது.

இதேவேளை திவிநெகும சட்டமூலம் தொடர்பான விவாதம் கடந்த ஆறாம் திகதி நாடாளுமன்றத்தில் ஆரம்பமானது. இதன்போது சட்டமூலத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட வாதங்களுக்குப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ விளக்கமளித்தார்.

இந்த நிலையில் அடுத்த மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள திவிநெகும சட்டமூலத்தில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பிரதி சபாநாயாகர் சந்திமவீரக்கொடி மேலும் தெரிவித்துள்ளார்.

### வெற்றுக்...

பார்வைக் கோளாறு ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் உள்ளது எனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. வானில் மர்மப்பொருள தெரிதல், எரிகல் விழுதல் உள்ளிட்ட பல மாற்றங்கள் உலகளாவிய ரீதியில் இடம்பெறுவதாக வானிலை கட்டுப்பாட்டு அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. சூரியனில் எந்தவித மாற்றங்களும் இடம்பெறாத நிலையில் மக்கள் அச்சமடைந்து வெற்றுக்கண்களால சூரியனைப் பார்ப்பதற்கு முயற்சிக்க வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

# நோயாளர் நலன்புரிச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ். தெல்லிப்பழை ஆதர்ர வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. வைத்தியசாலை மண்டபத்தில் வைத்திய அட்சகர் வைத்திய கலாநிதி எம். உமாசங்கர் தலைமையிலேயே இக்கூட்டம் நடைபெற்றது.

தலைவராக வைத்திய கலாநிதி உமாசங்கர், உபதலைவர் பொ.கமலநாதனும், செயலாளராக நா.நவரத்தினராசாவும், உபசெயலாளராக எஸ்.செல்வரத்தினமும், பொருளாளராக எஸ்.றொபின்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக சு.இரத்தினம், கு.நாராயணன், த.தேவராஜன், சு.சயந்தன், சு.ஏழூர்நாயகம், ம.மணிசேகரன், வ.பரராஜசிங்கம், வி.ஜெயராசா, வைத்திய கலாநிதி எ.யோகராசா, என்.பத்மநாதன், எஸ்.கனகராஜேஸ்வரன், எஸ்.ஜஸ்ரின் சுரேந்திரன், சோ.சுகிர்தன், எம்.சந்திரசேகரம், ஆ.மகேஸ்வரன், சிவசோதி ஆகியோரும், கணக்காய்வாளராக காஞ்சனாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# கட்டண அறவீட்டினைக் கட்டுப்படுத்த முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 618 முச்சக்கரவண்டிகளுக்கும் மீற்றர் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் 2013 ஜனவரி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக முச்சக்கரவண்டி சங்க தலைவர் எட்வேட் போல் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்றுக் காலை 11.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் அமைந்துள்ள தம்பர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின் போது, யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிகளின் சாரதிகள் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தினை அறவிடுவதற்காக முச்சக்கரவண்டிகளில் மீற்றர் பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதுடன், முச்சக்கரவண்டிச் சாரதிகள் சீருடைகள் அணிவது குறித்தும் ஜனவரி மாதம் நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

இக்கலந்துரையாடலில், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் (கமல்) கமலேந்திரன் மற்றும் யாழ். மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் எட்வேட் போல் உட்பட உரிமையாளர், சங்க உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

### பயங்கரவாத...

இந்தியாவில் இருந்து வந்து நக்கீரன் வீதி அல்வாய் வடக்கிலுள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டதாகவும் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வடமராட்சிப் பகுதியில் இது வரை சுமார் 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (116)

### சமஷ்டி...

இலங்கைக்கு தேவையானது சமஷ்டி ஆட்சிமுறை என தெரிவிததுள்ள மங்கள, 2000 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அவ்வாறான தீர்வுத்திட்டம் ஒன்றை வழங்கவே முயற்சி செய்ததாகவும் கூறியுள்ளார். நாட்டை சமஷ்டி நாடாக மாற்றினால் என்ன? அதற்கு அச்சமடையத் தேவையில்லை. சமஷ்டி ஆட்சியே இலங்கைக்கு தேவைப்படுகிறது. 2000 ஆம் ஆண்டு அப்படியான யோசனையையே நாங்கள் கொண்டுவந்தோம். ஐக்கிய இராஜ்ஜியமாக இருக்கும், பிரித்தானியாவில் ஸ்கொட்லாந்து, வேல்ஸ் பிராந்தியங்களில் தனியான நாடாளுமன்றங்கள் இருக்கின்றன எனவும் மங்கள சமரவீர கூறியுள்ளார். எனினும் 2000 ஆம ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க கொண்டுவந்த சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கம் அடங்கிய தீர்வுப் பொதியை ஐக்கிய தேசியக்கட்சி நிராகரித்தது என்பது குறிப்பிடதக்கது.

### வீட்டுத்திட்ட...

நடைமுறைகள் தொடர்பாக விளக்கிய அமைச்சர் இதனை இலகுபடுத்துவது மற்றும் விரைவுபடுத்துவது,

தொடர்பிலும் அவதானம் செலுத்தினார். தரவுகளைத் திரட்டி பயனாளிகள் தெரிவு செய்யப்படாமலும், வீட்டுத்திட்ட நடவடிக்கைகள் விரைவு படுத்தாமலும் இருப்பின் அதற்குரிய பணம் திரும்பிச் சென்றுவிடுமென்று இந்தியத் தூதுவர் தெரிவித்துள்ளதனையும் இதன்போது அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலில் பங்குகொண்டோரின் கருத்துக்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், காணி உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பாக எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும் கலந்துரையாடலின் போது ஆராயப்படவுள்ளதாகவும், நேற்றைய கலந்துரையாடலின் நிறைவில் அமைச்சர் தெரிவித்தார்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அரச அதிபர், மேலதிக அரச அதிபர், மாநகர முதல்வர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலர்கள், பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர்கள் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்துகொண்டனர்.

# தெல்லிப்பளை வைத்தியசாலையில் இரத்த வங்கி திறப்பு



தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கி திறப்பு விழா நேற்றுக் காலை 9.00 மணியளவில் வைத்தியசாலை அத்தியட்சகர் எம்.உமாதரன் தலைமையில் இடம்பெற்றது.

வைத்தியசாலை இரத்த வங்கியை மகப்பேற்று மருத்தவ நிபுணர் வைத்தியகலாநிதி குழந்தைவடிவேலு திறந்து வைத்தார்.இதனைத் தொடர்ந்து இந்து மதக்குருக்கள் கிறிஸ்தவ மதக் குருக்கள் ஆகியோரின் ஆசீர்வாதங்கள் இடம் பெற்றன.

இந் நிகழ்வில் மங்கள விளக்கினை வைத்தியநிபுணர் குழந்தைவடிவேலு வலி வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சோ. சுகிர்தன், 515 ஆவது படையணியின் கட்டளைத்தளபதி பிரிகேடியாார் ரன்தெனிகல தெல்லிப்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராய்சி, தெல்லிப்பளை சுகாதார வைத்தியதிகாரி நந்தகுமார், உடுவில் சுகாதார வைத்தியதிகாரியும் முன்னாள் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரியுமான வைத்திய கலாநிதி ஜெயக்குமார், நல்லூர் றோட்டறிக்கழகத்தலைவர் உட்பட மற்றும் பலர் ஏற்றி வைத்தனர்.

# நீதிமன்ற சுயாதீனத்தை பாதுகாக்கும் சட்டத்தரணிகள்முயற்சிக்கு வரவேற்பு



(கொழும்பு)

நீதிமன்ற சுயாதீனத்தை பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையில பெரும் எண்ணிக்கையிலான சட்டத்தரணிகள் ஒன்றுகூடியுள்ளமை தொடர்பில் தாம் நேர்மையான முறையில் மகிழ்ச்சியடைவதாக பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க, நேற்று முன்தினம் இடம்பெற்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் கூட்டம் தொடரபாக கருத்து வெளியிடுகையில் தெரிவித்துள்ளார்.

நீதித்துறைசார் தொழிலில் ஈடுபடும் உறுப்பினர்களின் இந்த பாரிய அர்ப்பணிப்பு, முன்னோக்கிச் செல்வதற்கு உறுதுணையாக அமைந்துள்ளதென அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதி மற்றும் நியாயத்தை நிலைநிறுத்துவதற்கான இந்த ஒன்றுகூடல், 'தம்மை உற்சாகப் படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமக்கெதிரான விசாரணைகள் இயற்கை நியதி கோட்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்படவேண்டும் என சட்டத்தரணிகள் ஏகமனதாக தீர்மானித்தமை தொடர்பில் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் நீதிபதிகள் தடையின்றி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாத்திரமல்லாது, அவர்களது சுயாதீனத் தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இரட்டை குடியுரிமை சட்டம்; திருத்துவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

இரட்டைக் குடியுரிமைச் சட்டத்தை திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, குடிவரவு மற்றும் குடியகல்வுத்திணைக்களப் பணிப்பாளர் சூலாநந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த 3மாதங்களாக இந்த சட்டத்திருத்தம் தொடர்பாக, சட்டமா திணைக்களத்தினால் பரிசீலிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரட்டைக் குடியுரிமை வழங்கப்படுவதில் ஏற்பட்ட சில சட்டச் சிக்கல்களின் நிமித்தம், இந்த சட்ட மூலத்தில் திருத்தம் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்தச் சட்டத் திருத்தம் தொடர்பில் எதிர்வரும் ஜனவரி மாதம் 18ஆம் திகதி பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிற்கும், குடிவரவுத்துறை அதிகாரிகளுக்கும் இடையில் விசேடசந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பயங்கரவாதத்தை தோற்கடிக்க முரண்பாடுகளை தீர்க்க வேண்டும்

## கூறுகிறார் சந்திரிகா



(கொழும்பு)

சமூக, அரசியல் ரீதியான பாகுபாடுகளும், தொடர்ச்சியான அழுத்தங்களும், முரண் பாடுகளை வன்முறைகளாக மாற்றுவதாக இலங்கையின் முன்னாள ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

லண்டனில் கடந்த வாரம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர்,

பயங்கரவாதம் நாட்டின் மிகப் பெரிய சவாலாக இருந்துள்ளது. பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு, முரண்பாடுகளை தீர்க்கும் செயற்பாடே முக்கியமானதாக உள்ளது.

இராணுவ தளபாடங்களை விட, முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்காக, ஜனநாயக, இராஜதந்திரம், புரிந்துணர்வு போன்ற ஆயுதங்களை ஏந்தி செயற்படுவதே சிறந்த அரசியல் சாணக்கியம் என்றும் அவர சுட்டிக்காட்டியுள்ளார்.

நிலையான சமாதானத்தை தக்க வைத்துக் கொள்ளவும், முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கும், ஜனநாயகத்தை முழுமையாக செயற்பட அனுமதிப்பதுடன், முரண்பாடுகள் தோன்றுவதற்கான காரணங்களை அறித்து அதனை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறினார்.

# பிரதான வீதியில் விபத்து இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று இரவு 7.30 மணியளவில் பிரதான வீதி பஸ்தியன் பிள்ளை சந்தியில் மிக வேகமாக வந்த இளைஞர் ஒருவர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகி யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவரின் முகப்பகுதி மிக மோசமாகக் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். யாழ். போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(இ)

# பெற்றோல் விலை அதிகரிப்பு முச்சக்கர வண்டிக் கட்டணமும் உயரும்

(கொழும்பு)

பெற்றோல் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து முச்சக்கர வண்டிக் கட்டணங்களையும் அதிகரிக்கவுள்ளதாக அகில இலங்கை முச்சக்கரவண்டிச் சங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி ஒரு கிலோமீற்றருக்கான கட்டணம் 3 ரூபாவிலிருந்து 5 ரூபாவரை அதிகரிக்கப்படவுள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரிவித்தார்.

முச்சக்கரவண்டிகளில் தற்போது ஒரு கிலோமீற்றருக்கு 35 ரூபா அறவிடப்படுகின்றது அக்கட்டணம் 38 ரூபா அல்லது 40 ரூபாவாக அறவிடப்படும்.

ஆரம்பக்கட்டணமான 50 ரூபாவில் எவ்விதமான மாற்றங்களும் ஏற்படுத்தப்படமாட்டாது என்றும் அச்சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை சனிக்கிழமை நள்ளிரவு முதல் 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புற்றுநோய் வைத்தியசாலை மஹரகமவில் புதிதாக அமைப்பு

மஹர புற்று நோய் வைத்தியசாலையுடன் இணைந்து புதிய புற்று நோய் வைத்தியசாலையொன்றை நிர்மாணிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

பிரித்தானியாவின் தனியார் நிறுவனமொன்று இதற்கான நிதியுதவியினை வழங்குவதாகவும் நிர்மாணப்பணிகள் அடுத்த மாதமளவில் ஆரம்பமாகவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏழு மாடிகளைக் கொண்ட, 373 சத்திரசிகிச்சை கட்டில்களை உள்ளடக்கும் வகையில் அமையவுள்ள இந்த வைத்தியசாலைக் கட்டட நிர்மாணப்பணிகளுக்கு 210 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

# தண்டவாளத்தில் பேருந்து; தவிர்க்கப்பட்டது விபத்து



(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று ரயில் தண்டவாளத்தில் பயணித்த சம்பவம் ஒன்று பண்டாரவளையில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து பதுளையை நோக்கி சுமார் 40 பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸே தண்டவாளத்தில் சில அடி தூரம் பயணித்துள்ளது.

குறித்த பஸ் பண்டாரவளை கொலனேதென்ன வளைவில் திரும்பியபோதே பஸ், தண்டவாளத்திற்குள் சென்றுவிட்டது.

சம்பவத்தை அடுத்து விரைந்து செயற்பட்ட ரயில் கடவை பாதுகாப்பு ஊழியர் இது தொடர்பில் பண்டாரவளை மற்றும் ஹப்புத்தளை ரயில் நிலையங்களுக்கு உடனடியாக அறிவித்தார்.

இதனையடுத்து கொழும்பை நோக்கி பயணித்த உடரட்ட மெனிக்கே பண்டாரவளையிலும் மற்றும் பொடிமெனிக்மே ஹப்புத்தளையிலும் 30 நிமிடங்கள் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான அந்த பஸ் சாரதியின் சாமர்த்தியத்தினாலும் ரயில் கடவை பாதுகாப்பு ஊழியரின் துரித செயற்பாட்டின் காரணத்தினாலும் பாரிய விபத்து இடம்பெறுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

# பெருமளவு நாய்கள் இறப்பு; சிவப்பு மழை காரணமா?



(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டத்தில் திமுலாகல பிரதேசத்தில் உள்ள பல பாகங்களிலும் எந்தவித நோய்த் தொற்றும் இன்றி பெருந்தொகையான நாய்கள் இறந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த நாட்களாக மனப்பிட்டிய பிரதேசத்தில் பெய்த சிவப்பு மழையில் நனைந்ததாகக் கருதப்படும் நாய்களே மரணித்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் நாய்கள் இறந்தமை தொடர்பில் தமக்கு இதுவரை தகவல் எதுவும் கிடைக்கப் பெறவில்லை என பிரதேச வைத்தியர் தெரிவித்துள்ளார்

செவனகல, மனம்பிட்டி உள்ளிட்ட சில பகுதிகளில் பெய்த சிவப்பு மழை நீர் மாதிரிகளில் அடையாளம் காணப்பட்ட நுண்ணங்கியினால் உடலுக்கு பாதிப்பு இல்லை என வைத்திய ஆய்வுகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 டிசம்பர் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.